வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu வாரமலர்








Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 07.01.2024 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 07 | பக்கங்கள் : 16




08 ஜனாதிபதித் தேர்தல்: ரணிலுக்கான வாய்ப்புகளும் சவால்களும்!


09 வடக்கிலிருந்து புறப்பட்டுள்ளது ரணிலின் ஜனாதிபதித் தேர்தல் 'ரயில்'!


10 தமிழகத்தவரின் தப்பான அபிப்பிராயங்களை நீக்கிய கில்மிஷா


11 நரகத்தில் ஓர் இடைவேளைக்கு பிறகு...!


# பொருளாதார வளர்ச்சிக்கு மத நல்லிணக்கம் முக்கியம்!

## சர்வமத தலைவர்களிடையே ஜனாதிபதி

- யாழ். - தென் கைலாயத்தை மையமாகக் கொண்டு இந்து மத மேம்பாடு
- யுத்தத்தால் இழந்த வருமானத்தை மீள வழங்கும் வகையில் அபிவிருத்தி

யாழ்ப்பாணம், ஜனவரி 07

பொருளாதார வளர்ச்சிக்கு மத நல்லிணக்கம் மிகவும் முக்கியமானது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார். அத்துடன், வடக்கில் யுத்தத்தால் இழந்த வருமானத்தை மீள வழங்குவதற்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை துரிதப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

15





## 'மன்னார் சிவபூமி' நூலை ஜனாதிபதிக்கு வழங்கினார் மறவன்புலவு சச்சிதானந்தன்!

யாழ்ப்பாணம்,ஜன.07

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் 'மன்னார் சிவபூமி' என்ற தனது நூலை வழங்கி வரவேற்றார் ஈழம் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சி தானந்தன்.

நான்கு நாள் பயணமாக வடக்கு வந்துள்ள ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க நேற்று யாழ்ப்பாணத்தில் சர்வமதத் தலைவர்களை சந்தித்தார். இதன்போதே மறவன்புலவு சச்சிதானந்தன் மன்னார் சிவபூமி நூலை அவரிடம் கையளித்தார்.

ஜனாதிபதிக்கு பொன்னாடை போர்த்தி கௌரவம் அளித்ததைத் தொடர்ந்து சச்சிதானந் தன் மன்னார் சிவபூமி நூலை அவரிடம் கையளித்தார்.

மன்னார் சிவபூமி என்ற நூல் மறவன்புலவு

15

## கட்டைக்காட்டில் 55 கிலோ கஞ்சா மீட்பு!

வடமராட்சி,ஜன. 07

வடமராட்சி கிழக்கு - கட்டைக்காட்டில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் 55 கிலோ கேரள கஞ்சா கடற்

15

## வடக்கு மாகாண வர்த்தகர்களின் பிரச்னைக்கு இரு மாதங்களில் தீர்வு

### ஜனாதிபதி ரணில் உறுதி

யாழ்ப்பாணம்,ஜன. 07

வட மாகாண வர்த்த கர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு எதிர் வரும் இரண்டு மாதங் களில் தீர்வு வழங்கப் படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட அமைச்சு களின் அதி காரிகள் எதிர்வரும் இரு வாரங்களில் வடக்குக்கு வந்து இந்த விடயம் தொடர்பில் ஆராய்வர். வட மாகாண வர்த் தக சமூகத்தினரின் பிரச்னைகளுக்குத்

15



தமிழர்களின் வீர விளையாட்டான ஏறுதழுவும் போட்டி நேற்று திருகோணமலை - சம்பூரில் நடை பெற்றபோது...! (செய்தி 16ஆம் பக்கத்தில்)



## அகிலத்திருநாயகிக்கு ஜனாதிபதி பாராட்டு!

யாழ்ப்பாணம், ஜன. 07

பிலிப்பைன்ஸில் நடைபெற்ற 22ஆவது 'மூத்தோருக் கான ஆசிய தடகள சம்பியன்ஷிப்' போட்டியில் பங்கேற்று தங்கப்பதக்கம் வென்ற அகிலத்திருநாயகியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரில் அழைத்து பாராட்டினார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் பணிமனை யில் நேற்று சனிக்கிழமை இந்த சந்திப்பு நடை பெற்றது.

15

## ஐ. எம். எவ்வின் இரண்டாவது கட்ட கடனும் இலங்கைக்கு கிடைத்தது!

கொழும்பு, ஜன. 07

சர்வதேச நாணய நிதியம் (ஐ. எம். எவ்.) வழங்கிய இரண்டாவது கட்ட கடன் இலங்கைக்கு கிடைத்துள் ளது. இந்தக் கடனை இலங்கை பெறுவதற்கு நாணய நிதியத்தின் ஒப்புதலுக்கு மூன்று மாதங்கள் தாமதமா னது.

இந்த கடன் தொகையை இலங்கைக்கு விடு விக்கவேண்டும் என்று நாணய நிதியத்தின் இலங் கைக் கடன் ஒப்புதல் பணியின் தலைவர் பீற்றர்

15

## அரசமைப்பு பேரவைக்கு ஐ. எம். எவ். நிபந்தனை!

கொழும்பு, ஜன. 07

அரசமைப்பு பேரவையால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பான விதிமுறைகளை ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் தயாரித்து வர்த்தமானியில் வெளியிட வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் (ஐ. எம். எவ்.) அரசமைப்பு பேரவைக்கு அறிவித்துள் ளதாக அறிய வருகிறது.

15

## 2023ஆம் ஆண்டில் மட்டும் 9 இலட்சத்தைக் கடந்தது கடவுச்சீட்டு விநியோகம்!

கொழும்பு, ஜன. 07

கடந்த ஆண்டு மட்டும் 9 இலட்சத்து 10 ஆயி ரத்து 497 பேர் வெளிநாடு செல்லும் நோக்கில் கட வுச்சீட்டு பெற்றனர் என்று குடிவரவு - குடியகல்வு திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடவுச்சீட்டு வழங்குவதன் மூலம் திணைக்க ளத்துக்கு 4 ஆயிரத்து 100 கோடி ரூபாய் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

நாளொன்றுக்கு கடவுச்சீட்டு வழங்கும் பிரதான பணிமனை உட்பட பிராந்திய பணிமனை களில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 2,500 - 2,700 வரை

15


உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது

தேசிய மக்கள் சக்தியில் நடக்கும் சம்பவங்களை நேற்று இந்தப் பத்தியில் பார்த்தோம். இன்று ஐக்கிய மக்கள் சக்திக்குள் நடக்கும் சம்பவங்கள் பற்றி சில தகவல்களைப் பெற முடிந்தது. அவை ஏற்கனவே அரசல் புரசலாக வெளிவந்தவைதான் என்றாலும் அதுகுறித்து ஏன் ஊர்க்குருவி எழுதவில்லை என்று நீங்கள் கேட்கக் கூடாதல்லவா?

விடுதலைப் புலிகள் இயக்கம் முதலில் தோற்றம்பெற்றபோது, தாக்குதல் நடத்திவிட்டு ஓடிஒளிந்து கொள்ளும் தாக்குதலுடன்தான் ஆரம்பிக்கப்பட்டது. அதுவும் தாக்குதல் நடத்திவிட்டு படையினரின் ஆயுதங்களையே சேகரித்து பின்னர் அதன்மூலமே தாக்குதல்களை நடத்தினார்கள்.

பின்னர் வளர்ச்சி அடைந்து நேரடி யுத்தத்துக்கு செல்லுமளவுக்கு அவர்கள் வளர்ந்திருந்தபோதுதான் இந்தியப் படைகள் இலங்கை வந்தன.

தவிர்க்க முடியாத யுத்தம் ஒன்றை அவர்களுக்கு எதிராகப் புலிகள் ஆரம்பித்தபோது உலகின் ஐந்தாவது பெரிய படைக்கு எதிராக இந்தப் 'பொடியள்' எங்கே நின்றுபிடிக்கப் போகிறார்கள் என்றுதான் பலரும் விமர்சனம் செய்தனர்.

ஆனால், அவர்கள் இந்தியப் படையினருக்கு தமது ஆயுத வலிமையால் இல்லாவிட்டாலும் மனவலிமையால் நின்று போராடினார்கள். மீண்டும் தாக்குதல் நடத்திவிட்டு ஓடிஒளிந்து கொள்ளும் நிலைக்கு புலிகள் சென்ற போதிலும் கடைசிவரை இந்தியப் படையினருக்கு நெருக்கடியைக் கொடுத்துக்கொண்டே இருந்தனர்.

இந்தியப் படைகள் இலங்கையில் இருப்பதை ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வந்தவர் அப்போதைய பிரதமராக இருந்த ரணசிங்க பிரேமதாஸ. அவரது கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் சம்மதத்துடன் இலங்கையில் இந்தியப் படைகள் நிலைகொண்டிருந்தபோதிலும் பிரேமதாஸ இந்தியப் படைகளின் பிரசன்னத்துக்கு எதிராகவே இருந்தார்.

பின்னர் அவர் ஜனாதிபதி ஆகியதும் அவருடன் பேச்சு நடத்திய விடுதலைப் புலிகள் அவரிடமிருந்து ஆயுதங்களையும் மற்றைய உதவிகளையும் பெற்றுக்கொண்டனர். பிரேமதாஸவுடன் இணைந்து இந்தியப் படைகளை வெளியேற்றிய விடுதலைப் புலிகள் பின்னர் அவருடன் முரண்பட்டுக்கொண்டு மீண்டும் இலங்கைப் படையினருக்கு எதிராக யுத்தத்தைத் தொடங்கினர்.

இந்தியப் படைகளால் மறைவிடங்களுக்கு முடக்கப்பட்டிருந்த புலிகள், இந்தியப் படையினர் வெளியேறியதும் வடக்கு - கிழக்கு எங்கும் ஒரே நேரத்தில் வெளிப்பட்டு முழு இடங்களிலும் இலங்கைப் படையினரை மூர்க்கத்தனமாக எதிர்கொண்டனர்.

பின்னர் விடுதலைப் புலிகள் ஒரு பெரும் நிலப்பரப்பை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்ததும் உலகமே வியக்கத்தக்க வகையில் செயல்பட்டதும் பழைய சங்கதிகள். ஆனால், யார் தயவுடன் இந்தியப் படையினரை வெளியேற்றிவிட்டு இலங்கைப் படையினருடன் மோதினார்களோ அவரையே மூன்று ஆண்டுகளில் தற்கொலை தாக்குதல் மூலம் படுகொலை செய்தனர்.

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ ஒரு மே தின ஊர்வலத்தில் வைத்து புலிகளின் தற்கொலை தாக்குதலில் கொல்லப்பட்டார். அவ்வாறு அவர்கள் அவரைப் படுகொலை செய்தது எதற்காக என்பது அப்போது தெரிவிக்கப்பட வில்லையானாலும் பேச்சின்போது அவர் உறுதியளித்தவாறு நடந்துகொள்ளவில்லை என்றும் அதனாலேயே அவரை புலிகள் கொன்றனர் என்றும் பின்னாட்களில் புலிகளின் தத்துவாசிரியராக இருந்த அன்ரன் பாலசிங்கம் எழுதினார்.

இந்த சம்பவங்களை எழுதுவதற்கு இப்போது என்ன வந்தது என்று நீங்கள் நினைப்பதிலும் தவறில்லைத் தான்.

ஆனால், பிரேமதாஸ எவ்வாறு உறுதியளித்தவாறு நடந்துகொள்ளாமல் விட்டாரோ அதேபோன்று அவரின் புதல்வரும் நடந்துகொள்கின்றாரா என்று இப்போது நினைக்காமல் இருக்கமுடியவில்லை.

ஐக்கிய மக்கள் கூட்டணியை பலப்படுத்தி அதனை பெரிய கூட்டணியாக மாற்றுவதற்கான பொறுப்பு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது.

அப்போது, அதில் இடம்பெற்றுள்ள சிறுபான்மை கட்சிகளான தமிழ் முற்போக்கு கூட்டணி, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் ஒரேயொரு நிபந்தனையை விதித்திருந்தனவாம். அதாவது, இனவாத அரசியல் செய்யும் விமல் வீரவன்ஸ, கம்மன்பில போன்றவர்களையும் கோட்டாபயவின் 'வியத்மக' என்ற அமைப்பிலிருந்து அரசியலுக்கு வந்தவர்களையும் எந்தக் காரணம் கொண்டும் அந்தக் கூட்டணியில் இணைக்கக்கூடாது என்பதே அவர்கள் விதித்த நிபந்தனை.

சிங்கள மக்கள் மத்தியில் தீவிர இனவாதத்தை விதைத்து அதன்மூலம் கோட்டாபயவுக்கு சிங்கள வாக்குகளைப் பெற்று அவரைப் பதவியில் அமர்த்தியதில் 'வியத்மக' என்ற அமைப்புக்கு தீவிர பங்கு உண்டு. அதன் தவிசாளராக செயல்பட்டவர் கலாநிதி நாலக கொடஹேவா. அவர் இப்போது கம்பஹா மாவட்ட எம். பி., இதேபோல அந்த அமைப்பிலிருந்து வந்த மற்றுமோர் எம். பி. கலாநிதி சன்ன ஜயசுமண. இவர் கோட்டாபயவின் ஆட்சிக்காலத்தில் கொரோனா தொற்றை கட்டுப்படுத்தும் பணியில் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தவர். கொரோனா தொற்றில் மரணித்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அவர்களின் மத நம்பிக்கைக்கு எதிராக தகனம் செய்ய வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தவர். இந்த சன்ன ஜயசுமண. இவர்கள் இருவரும் இப்போது ஐக்கிய மக்கள் சக்தியில் சங்கமமாகியிருக்கின்றனர்.

பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், டிரான் பெரேரா போன்றவர்களுடன் ஐக்கிய மக்கள் சக்தியில் அண்மையில் சங்கமமான ஆறு பேரில் இவர்கள் இருவரும் அடங்குவர்.

இவ்வளவு விரைவாகவே தமக்கு வழங்கிய வாக்குறுதியை சஜித் மீறிவிட்டார் என்று கொதித்துப் போயிருக்கிறார்கள் சிறுபான்மை கட்சித் தலைவர்கள்.

இதனால் எதிர்வரும் இருபதாம் திகதி தமது மிகப்பெரும் கூட்டணி பற்றிய அறிவித்தலை விடுக்கவிருந்த ஐக்கிய மக்கள் சக்தி சிறுபான்மை தலை வர்களை சமாதானப்படுத்த முயன்று கொண்டிருக்கின்றதாம்.!

- ஊர்க்குருவி.

# மடு, துணுக்காய் இணைக்கப்பட்டு கல்வி வலயமாக மாற்றத் திட்டம்!



வவுனியா, ஜன. 07

மடு மற்றும் துணுக்காய் பிரதேசங்களை இணைத்து கல்வி வலயமாக மாற்ற திட்டமிட்டுள்ளதாக வட மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், கடந்த முறை உயர்தரத்தில் நாடளாவிய ரீதியில் முதலிடத்தை யாழ்ப்பாணம் பெற்றுக் கொண்டது. க. பொ. த. சாதாரண தர பரீட்சையிலும் சிறப்பான பெறுபேறுகள் கிடைத்திருந்தன. மடு, துணுக்காய் பிரதேசங்களை இணைத்து கல்வி வலயமாக மாற்ற திட்டமிட்டுள்ளோம்.

வட மகாண கல்வி அபிவிருத்திக்காக அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் தாமாக முன்வந்து செயல்திறனுடன் பணியாற்றி வருகின்றனர். அது தொடர்பில் மகிழ்ச்சியடைய முடியும். சுகாதார துறையில் காணப்படும் பிரச்சினைகளை நிவர்த்திகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதேபோல், விவசாய அபிவிருத்தி திட்டங்கள் பலவும் தற்போதும் ஆரம்பிக்கபட்டுள்ளன. குறிப்பாக இதுவரையில் பயிர்செய்யப்படாத நிலங்களில் பயிர்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பிலான தலைவீடுகளை மேற்கொண்டமைக்கு ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

இப்பிரதேச விவசாயிகளின் அறுவடைகளை கொண்டுச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் தொடர்பில் போக்குவரத்து அமைச்சருடன் கலந்துரையாடி தீர்வுகளை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கிறோம் - என்றார். (ஐ)

# முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் வாள் போதைப்பொருட்களுடன் இளைஞன் கைது!

முல்லைத்தீவு,ஜன.07

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்குட்பட்ட மாணிக்கபுரம் பகுதியில் வாள் மற்றும் போதை பொருட்களுடன் சந்தேக நபர் ஒருவரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மாலை குறித்த நபரை சந்தேகத்தின் பெயரில் கைது செய்த வேளை அவரிடம் இருந்து இரண்டு வாள்கள் மற்றும் கஞ்சா, ஐஸ் போதைப்பொருட்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

மாணிக்கபுரம் பகுதியினைச் சேர்ந்த 29 அகவையுடைய நபரே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரிடம் இருந்து பொதி செய்யப்பட்ட கஞ்சா பொதிகள் நான்கும், ஐஸ் போதைப் பொருள் 600 மில்லி கிராம் என்பன மீட்கப்பட்டுள்ளன. (அ)

# தன்னிச்சையான கைதுகளுக்கு சட்டத்தரணிகள் சங்கம் விசனம்!

கொழும்பு, ஜன. 07

அண்மைக்காலமாக அதிகரித்துவரும் தன்னிச்சையான கைதுகள், முறையான பிடியாணைகள் இன்றி காவல்துறை சோதனைகள் மற்றும் சட்டத்திற்கு புறம்பான கொலைகள் குறித்து ஆழ்ந்த கவலை அடைவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நாட்டின் நீதி அமைப்பில் பொதுமக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்கும் வகையில் அதிகாரிகள் செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

காவல்துறையினர் பொறுப்புக்கூறல் மற்றும் சட்ட நடவடிக்கைகளில் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றின் அவசியமும் இதன்போது எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அனைத்து மக்களும் நீதியான மற்றும் சமத்துவமான சமூகத்தை கட்டியெழுப்புவதற்காக ஒன்றிணைய வேண்டும் என்றும் சட்டம் உரிய முறையில் பின்பற்ற வேண்டும் என்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# காலி சிறையில் அதிகரிக்கும் நோய் தாக்கம்

கொழும்பு, ஜன. 07

காலி சிறைச்சாலையில் மேலும் 05 கைதிகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கைதிகள் குழு தற்போது கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக சிறைச்சாலைகளின் பேச்சாளர் காமினி திஸநாயக்க தெரிவித்தார்.

காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மாத்தறை சிறைச்சாலையில் 2 கைதிகள் பின்னர் உயிரிழந்த போதிலும், சிறைச்சாலையின் நிலைமை மீண்டும் வழமைக்குத் திரும்பியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சுகாதார அதிகாரிகளின் அறிவுறுத்தலின் பேரில், காலி சிறைச்சாலைக்கு 7 நாட்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், அனைத்து கைதிகள் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் மருந்துகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் திஸாநாயக்க தெரிவித்தார்.(அ)

# தொழில் அமைச்சரின் செயலர் எனக் கூறி பணம் மோசடியில் ஈடுபட்டவர் சிக்கினார்!

கொழும்பு, ஜன. 07

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் செயலாளர் என தன்னை இனங்காட்டி, நடித்து இஸ்ரேலில் வேலை வாய்ப்பு தருவதாக பணத்தை பெற்றுக் கொண்ட ஒருவர் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலில் விவசாய வேலைகளை வழங்குவதற்காக காலி, பூஸ்ஸ மற்றும் வெலிகம பிரதேசங்களில் வசிக்கும் இளைஞர்களிடம் இருந்து தலா 3 இலட்சம் ரூபா பணத்தை சந்தேக நபர் பெற்று ஏமாற்றியுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் விசேட புலனாய்வு பிரிவினரே இவரைக் கைது செய்துள்ளனர். (அ)

# எனது குடும்ப உறுப்பினர்களுக்கும் பெரமுனவுக்கும் தொடர்பு இல்லை

## கூறுகிறார் மஹிந்த ராஜபக்ஷ



கொழும்பு, ஜன. 07

**எனது குடும்ப உறுப்பினர்களுக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. அவர்கள் எந்தவொரு அரசியல் தீர்மானங்களிலும் அங்கம் வகிக்கவில்லை. கட்சிக்கு எதிராக கூறப்படும் தேவையற்ற கருத்துக்களால் பொதுமக்களை தவறாக வழிநடத்த வேண்டாம் என முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

பொதுஜன பெரமுன கட்சியின் உள்விவகாரங்கள் குறித்து ராஜபக்ஷவின் குடும்ப உறுப்பினர்கள் வெளியிட்ட அறிக்கை தொடர்பில் தெரிவித்தபோதே மஹிந்த மேற்கண்டவாறு குறிப்பிட்டதாக ஆங்கில இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் அவர், "அரசியல் தீர்மானங்கள் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் மூலமே பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும் குடும்ப உறுப்பினர்கள் மூலம் அல்ல. எனது உறவினரின் கருத்துக்களுக்கு நாங்கள் பொறுப்பு கூற முடியாது. அவர்களை நேர் காணல் செய்வது நியாயமற்றது" என தெரிவித்துள்ளார்.

மேலும், "தேவையற்ற கருத்துகளால் பொதுமக்களை தவறாக வழிநடத்த வேண்டாம். நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களில் பொதுமக்கள் மீது சுமத்தப்படும் அதிக வரிகளுக்கு எனது கட்சி எதிரானது. மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் எனது கட்சி தொடர்ந்து பணியாற்றும்" என்றும் மகிந்த குறிப்பிட்டுள்ளார். (அ)

# வாகரையில் மினி சூறாவளி! 6 படகுகள், 3 இயந்திரங்கள் சேதம்

மட்டக்களப்பு, ஜன. 07

மட்டக்களப்பு வாகரை பிரதேசத்தில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரவு வீசிய மினி சூறாவளியால் கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடி படகுகள் தூக்கி வீசப்பட்டதையடுத்து, 6 படகுகள், 3 இயந்திரங்கள் சேதமடைந்துள்ளதாக வாகரை பிரதேச செயலாளர் க.அருணன் தெரிவித்தார்.

வாகரை காயங்கேணி கடற்கரையில் மீனவர்கள் மீன்பிடி இயந்திர படகுகளை நிறுத்தி வைத்திருந்த நிலையில், நேற்று முன் தினம் இரவு திடீரென வீசிய மினி சூறாவளி காற்று படகுகளை தூக்கி வீசியதில் 6 படகுகள், 3 இயந்திரங்கள் சேதமடைந்துள்ளன.



அதேவேளை கடந்த வாரம் சீரற்ற காலநிலையால் பெய்து வந்த கடும் மழை காரணமாக ஏற்பட்ட ஆற்று வெள்ளத்தினால் கல்லரிப்பு பிரதேசத்துக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டதையடுத்து, அந்த பிரதேசத்துக்கு உழவு இயந்திரம் மற்றும் படகு சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த 22 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்தும் கதிரவெளி கனிஸ்ட வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் தற்போது குறித்த பகுதியில் தேங்கியுள்ள வெள்ள நீர் வழிந்தோடி வருவதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# மின்சார சபை ஊழியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை!



கொழும்பு, ஜன. 07

அத்தியாவசிய சேவையான மின்சார விநியோகத்திற்கு இடையூறு விளைவித்து பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட ஊழியர்களின் சேவையை இடைநிறுத்தி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர அறிவுறுத்தியுள்ளார்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர மின்சார சபை தலைவருக்கு கடிதமொன்றின் மூலம் குறித்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை மின்சார சபையை 6 பிரிவுகளாக பிரிப்பது தொடர்பிலான உத்தேச சட்டமூலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 3 நாட்களாக தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

உத்தேச சட்டமூலத்தை மீளப்பெறுமாறு இதன்போது போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

அத்துடன் இலங்கை மின்சார சபையின் உத்தேச சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால், இலங்கை மின்சார சபை பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் அபாயம் நிலவுமென அவர்கள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

மின் உற்பத்தி, பரிமாற்றம், விநியோகம், வர்த்தகம், வழங்கல், கொள்முதல் ஆகியவை நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் கீழ் தனித்தனியாக வைக்கப்பட வேண்டும் என்று புதிய வரைபு முன்மொழியப்பட்டுள்ளது.

இது தவிர, மின்சாரத்துறையின் ஒழுங்குமுறை, உரிமம் போன்ற பிரச்சினைகளுக்கு நிறுவனங்களை நிறுவுவதற்கான முன்மொழிவுகளும் இதில் அடங்கியுள்ளன.

இதேவேளை, இலங்கை மின்சார சபை ஊழியர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்துவதை கட்டுப்படுத்தும் சுற்றுநிருபத்திற்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் கடந்த 04 ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டது.

மின்சார சபையின் பதில் பொது முகாமையாளரின் கையொப்பத்துடன் குறித்த சுற்றுநிரூபம் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கோழி இறைச்சி விலை குறைப்பு

கொழும்பு, ஜன. 07

ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலை 40 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக நாரஹேன்பிட்டி பொருளாதார மத்திய நிலையத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உயிருள்ள கோழி ஒன்றின் விலை 20 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலை 1,200 ரூபாவாகவும், கறிக் கோழி இறைச்சியின் விலை 1,000 ரூபாவாகவும் மற்றும் தோல் உரித்த கோழி இறைச்சியின் விலை 980 ரூபாவாகவும் நாரஹேன்பிட்டி பொருளாதார மத்திய நிலையத்தில் விற்பனை செய்யப்படுகிறது.

அதேவேளை, ஒரு கிலோ மாட்டிறைச்சியின் விலை 2,000 ரூபாவாகவும், ஒரு கிலோ ஆட்டிறைச்சியின் விலை 3,200 ரூபாவாகவும் விற்கப்படுகிறது. (அ)

# வெளிநாட்டு பணியாளர்களால் அனுப்பப்படும் பணம் அதிகரிப்பு!

கொழும்பு, ஜன. 07

வெளிநாட்டு பணியாளர்களினால் இலங்கைக்கு பணம் அனுப்பப்பட்ட தொகை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி விடுத்துள்ள அறிக்கையில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 2023 ஆம் ஆண்டில் அனுப்பப்பட்ட தொகை 57.5 வீதமாக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் மாத்திரம் வெளிநாட்டு பணியாளர்களினால் 567.7 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கப் பெற்றுள்ளது.

இதேவேளை, 2021 ஆம் ஆண்டு குறித்த பணியாளர்களினால் அனுப்பப்பட்ட தொகை 5.5 பில்லியன் அமெரிக்க டொலராகவும் 2022 ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட தொகை 3.8 பில்லியன் அமெரிக்க டொலராக பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வடமராட்சி கிழக்கில் ஒதுங்கிய படகு!



யாழ்ப்பாணம், ஜன. 07

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு வத்திராயன் கடற்பகுதியில் சந்தேகத்துக்கிடமான படகு ஒன்று நேற்று அதிகாலையில் கரையொதுங்கியுள்ளது.

படகில் காணப்படும் மீன் பிடி திணைக்களத்தின் பதிவு இலக்கம் அழிக்கப்பட்டுக் காணப்படுவதால் குறித்த படகை போதை பொருள் கடத்தல்காரர்கள் உபயோகித்திருக்கலாமென சந்தேகிக்கப்படுகின்றது.

இது தொடர்பான விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மற்றும் கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் பௌத்த கொடியுடன் மிதப்பு ஒன்றும், மூடிய கொள்கலன் ஒன்றும் கரை ஒதுங்கியது. அதேவேளை நாகர்கோவில் பகுதியிலும் மரத்தினாலான மிதப்பு ஒன்றும் கரை ஒதுங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஐக்கிய மக்கள் சக்தியின் ஊழல் எதிர்ப்பு இயக்கத்தில் இணைந்தார் சமல் சஞ்சீவ!

கொழும்பு, ஜன. 07

விசேட வைத்திய நிபுணரான சமல் சஞ்சீவ ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்த ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் உப தலைவராகவும், ஐக்கிய மக்கள் சக்தியின் சுகாதார கொள்கைகள் குழுவின் செயலாளராகவும் நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஊழலுக்கு எதிரான பயணத்தை வலுப்படுத்தும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் அவர் இணைந்து கொள்வதில் மகிழ்ச்சியடைவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இந்த ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் மூலம் ராஜபக்ஷர்கள் உட்பட நாட்டை வங்குரோத்து நிலைக்கு இட்டுச் செல்ல காரணமான நபர்களை வெளிக்கொணர முடிந்ததாகவும், இதன் மூலம் சுகாதாரத் துறையில் இடம்பெற்ற ஊழல் மற்றும் மோசடிகளுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை முன்வைக்க முடிந்ததாகவும், அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் ஊழலையும் மோசடியையும் ஒழிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், வைத்தியர் சமல் சஞ்சீவ இன்று முதல் அந்தப் பயணத்தின் முன்னோடியாக செயற்படுவார் என்றும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டார். (அ)

# நான்கு நாட்களுக்குள் 1,085 பேருக்கு டெங்கு!

## விசேட டெங்கு ஒழிப்பு வாரம் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 07

**நாட்டில் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் நோக்கில் இன்று முதல் 13ஆம் திகதிவரையான ஒரு வார காலத்தை விசேட டெங்கு ஒழிப்பு வாரமாக பிரகடனப் படுத்துவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.**

டெங்கு நோயாளர்கள் கணிசமாக அதிகரித்து வருவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர், மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே, அவர் இதனைத் தெரிவித்தார். இச்சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்த போது,

"தற்போது தொடரும் சீரற்ற காலநிலைக்கு மத்தியில் டெங்கு நோய் பரவும் அதிக ஆபத்துள்ள 70 வலயங்கள் கண்டறியப்பட்டுள்ளதுடன், அவ்வலயங்களில் டெங்கு நோய் தொடர்பாக விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை அதிகளவாக முன்னெடுக்கவும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

முப்படையினர், பொலிஸார், சுகாதார அதிகாரிகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது" எனத் தெரிவித்தார்.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் புள்ளிவிபரத் தகவல்களுக்கமைய, கடந்த வருடத்தில் (2023) 88 ஆயிரத்து 398 டெங்கு நோயாளர்கள் கண்டறியப்பட்டதுடன், கொழும்பு மாவட்டத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகினர். டெங்கு நோயால் கடந்த வருடத்தில் மாத்திரம் 58 பேர் உயிரிழந்ததாக அத்தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

நாட்டில் 2024 ஜனவரி 4 ஆம் திகதிவரையான நான்கு நாட்களுக்குள் ஆயிரத்து 85 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். (அ)

# அதிவேக வீதியில் விபத்து; ரஷ்யப் பிரஜை உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 07

தெற்கு அதிவேக வீதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் 42 வயதான ரஷ்ய பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் இருந்து மாத்தறை நோக்கிப் பயணித்த பஸ் தெற்கு அதிவேக வீதியில் பின்னதுவ மாற்றுப்பாதைக்கு அருகில் 110.6 ஆம் மைல் கல் பகுதியில் சென்று கொண்டிருந்த போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பஸ் சாரதி உறங்கிய காரணத்தினால் அதே திசையில் சென்ற லொறியின் பின்பகுதியில் பஸ் மோதியதால் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் பஸ்ஸின் முன் பகுதியில் இருந்த ரஷ்ய பிரஜை படுகாயமடைந்த நிலையில் கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

பஸ்ஸின் முன் பகுதியில் இருந்த மற்றொரு வெளிநாட்டு தம்பதியினர் காயம் அடைந்துள்ளனர். அவர்கள் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்து தொடர்பில் பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், பின்னதுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# நாட்டு மக்கள் செலவை பொறுப்பேற்றால் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்க தயார்!

## கூறுகிறார் குமார வெல்கம



கொழும்பு, ஜன. 07

"தேர்தல் செலவை மக்கள் பொறுப்பேற்றால் ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குவதற்கு நானும் தயாராகவே இருக்கின்றேன்." - என்று பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

" ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குவதற்கு எனக்கும் தகுதி உள்ளது. ஆனால் அத்தேர்தலை எதிர்கொள்ள பண பலம் அவசியம். என்னிடம் தற்போது பணம் இல்லை. அறகலய காலத்தில் தாக்கப்பட்டேன். மருத்துவத்துக்கு மட்டும் 2 கோடி ரூபாவரை செலவளித்துள்ளேன்.

முன்னர் மக்கள்தான் மேடை அமைப்பார்கள், போஸ்டர் ஒட்டுவார்கள். அந்த கலாசாரம் தற்போது மாறியுள்ளது. எனவே, மக்கள் தேர்தல் செலவை பொறுப்பேற்றால் களமிறங்க நான் தயார்.

தேர்தலில் எந்த பக்கம் நிற்க வேண்டும் என்பதில் அவசரப்படக்கூடாது. ஹெலிகொப்டர் கூட்டணிக்கு தற்போது என்ன நடந்துள்ளது? எனவே, உரிய நேரத்தில் முடிவெடுக்கப்படும்." - என்றார். (அ)

# யாழில் இரு ஓட்டோக்கள் தீக்கிரை!

யாழ்ப்பாணம், ஜன. 07

யாழ்ப்பாணம் - அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரண்டு ஓட்டோக்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றதாக பாதிக்கப்பட்டவரால் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக இரண்டு வன்முறை கும்பல் இடையே இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவங்களின் தொடர்ச்சியாகவே இரண்டு முச்சக்கரவண்டிகள் தீக்கிரையாக்கப்பட்டது என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# ஓமானிலிருந்து கொண்டுவரப்பட்ட 20 இலட்சம் ரூபா பெறுமதியான சிகரெட்டுக்களுடன் வர்த்தகர் கைது!

கொழும்பு, ஜன. 07

இருபது இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சிகரெட்டுகளை சட்ட விரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டு வந்த வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஓமானில் இருந்து குறித்த சிகரெட்டுக்களை இலங்கைக்கு கொண்டு வர முயன்ற வர்த்தகர் ஒருவரே இவ்வாறு கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகளால் நேற்று சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான வர்த்தகர் தங்காலை பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடையவர் ஆவார்.

இவர் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு சுற்றுலா விசாவில் ஓமான் நாட்டுக்கு சென்றுள்ளார்.

இதையடுத்து, அந்த வர்த்தகர் நேற்று அதிகாலை 04.03 மணியளவில் ஓமானின் மஸ்கட்டில் இருந்து ஓமான் எயார் லைன்ஸ் விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

20 இலட்சம் ரூபா பெறுமதியாக 100 சிகரெட் கார்ட்டூன்களை மிகவும் சூட்சுமமாக இரண்டு பயணப்பொதிகளில் மறைத்துக் கொண்டு வந்த போது பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் கண்டுபிடித்து வர்த்தகரை கைது செய்தனர்.

கைப்பற்றப்பட்ட சிகரெட்டுகளுடன் கைதான வர்த்தகரை பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகள் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

# எந்த தேர்தல் நடந்தாலும் எமது கூட்டணி போட்டி!

## மேர்வின் சில்வா கூறுகிறார்



கொழும்பு, ஜன. 07

"சண்டைக்கோழிக்கு எந்த களமும் தயார்தான். அடுத்து எந்த தேர்தல் நடந்தாலும் எமது கூட்டணி போட்டியிடும்." - என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

"ராஜபக்சக்கள் அனைவரையும் நாட்டைவிட்டு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப் போம். ஊழல், மோசடி, கப்பம் பெறுதல் போன்ற நடவடிக்கை யில் ஈடுபட்ட அனைவரையும் கப்பலில் ஏற்றி அனுப்புவோம்.

ஒருவராகவந்துதான் ரணில் விக்கிரம சிங்க ஜனாதிபதியானார். ஆனால் நான் தொழிற்சங்க தலைவராக செயற்பட்டுள்ளேன். சிறந்தவர்கள் எம்முடன் உள்ளனர்.

சண்டை கோழிக்கு எந்த களமாக இருந்தாலும் தயார் தான். எந்த தேர்தல் வந்தாலும் அதனை எதிர்கொள்ள நாம் தயார்." - எனவும் மேர்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார். (அ)

# வீதித் தடைகளில் மோப்ப நாய்கள்!

## யுக்தியவின் அடுத்த கட்ட நடவடிக்கை

கொழும்பு, ஜன. 07

நாடளாவிய ரீதியில் உள்ள 607 பொலிஸ் நிலையங்களை உள்ளடக்கிய வீதிகளில், வீதித் தடைச் சோதனைகளை மேற்கொள்ள பொலிஸ் நாய்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ (sic) —

பதில் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரையின் பிரகாரமே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு எதிரான யுக்திய நடவடிக்கையின் கீழ் இந்த நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருவதாகவும், வாகனங்கள் மூலம் அதிகளவான போதைப் பொருள் கடத்தல் இடம்பெறுவதாகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார். (அ)

# குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை அடையாளம் காண விமான நிலையத்தில் நிறுவப்பட்ட தானியங்கி இயந்திரம்

கொழும்பு, ஜன. 07

குற்றச் செயல்களில் ஈடுபடக்கூடிய நபர்களை அடையாளம் காண்பதற்காக கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தானியங்கி முக அடையாளம் காணும் அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற் றும் பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் இந்த அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. எந்தவொரு சட்டவிரோத நடவடிக்கைகளிலும் ஈடுபடக் கூடிய எந்தவொரு வெளியேறும் அல்லது வருகை தரும் நபர் களை அடையாளம் காண இதன் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
07.01.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 22

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# த.தே கட்சிகளிடம் திட்டம் என்ன?

யுத்தம் முடிவுற்று பதினான்கு வருடங்களாகி விட்டன. இந்தக் காலப்பகுதியில் களத்திலும் புலத்திலும் ஏராளமான விடயங்கள் - பல்வேறு விடயங்கள் செய்யப்பட்டன என்று பிரசாரம் செய்யப்பட்டது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு கட்சிகள் தங்களுக்குள் மோதிக் கொண்டன. வடக்குக்கு வருகை தந்த ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தச்சட்டம் போதுமான அதிகாரங்களை கொண்டிருப்பதாகவும் ஒரு சுயபொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு அது போதுமானது - அதனை பயன்படுத்த வேண்டும் என்பதே தனது கொள்கை நிலைப்பாடு என்று கூறி சென்றிருக்கின்றார்.

அவ்வாறாயின், 2015 - 2019 வரையான நல்லாட்சி என்று சொல்லப்பட்ட காலத்தில் எதற்காக புதிய அரசியல் யாப்பு ஒன்றைப் பற்றிப் பேசி நேரத்தை சம்பந்தன் விரயம் செய்தார்? சம்பந்தனின் தவறான அணுகுமுறையை ஏன் கூட்டமைப்பின் பங்காளிகள் ஏற்றுக் கொண்டு ஒத்தோடினர்? ஏனெனில், யாருடன் இணைந்து அரசியல் யாப்பை கொண்டுவரப்போவதாக சம்பந்தன் தரப்பு கூறியதோ அவரே, 13இல் போதுமான அதிகாரங்கள் இருக்கின்றன என்றும் அதனை பயன்படுத்த வேண்டும் என்கின்றார்.

அவ்வாறாயின், அந்தப் போதுமான அதிகாரங்களை உச்சளவில் பயன்படுத்திக் கொண்டு அதிலிருந்து முன்னோக்கிப் பயணிப்பதற்கான பொறிமுறை ஒன்றைப் பற்றியல்லவா யோசித்திருக்க வேண்டும் - அதேவேளை, ரணிலின் கருத்துகள் பிறிதோர் உண்மையையும் உணர்த்துகின்றது. அதாவது, புதிய அரசியல் யாப்பு சாத்தியம் என்பதில் ரணில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. ஆனால், சம்பந்தன் தரப்பு புதிய அரசியல் யாப்பு பற்றி பேசியதால் அதனை சரியென்று கூறி பயணித்திருக்கின்றார். ஆனால், அவ்வாறானதொரு யாப்பு வரப்போவதில்லை என்று தெரிந்தே காலம் விரயம் செய்யப்பட்டிருக்கின்றது.

இந்த இடத்தில் தமிழ்க் கட்சிகளின் புத்திசாலித்தனம் - குறிப்பாக, சம்பந்தனின் புத்திசாலித்தனம் பரிகசிப்புக்கு உரியதாகின்றது. 'காலத்தே பயிர் செய்ய வேண்டும்' என்பார்கள். அதாவது, வாய்ப்புகள் கிடைக்கின்றபோது, அதனை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதனை இன்னொரு வகையில் கூறுவதானால், பேருந்து வருகின்றபோது அதில் ஏறிக்கொள்ள வேண்டும் - பேருந்தைத் தவறவிட்டுவிட்டு மற்றவர்களை குற்றஞ்சாட்டிக் கொண்டிருப்பதில் பயனில்லை. தமிழ்த் தேசிய அரசியலின் கடந்த காலம் இதுதான். ஆனால், துரதிர்ஷ்டவசமாக அந்தக் கடந்த காலத்திலிருந்து தமிழ்த் தலைவர்கள் என்போர் எதனையுமே கற்றுக்கொள்ளவில்லை.

இந்த ஆண்டு இலங்கைத் தீவைப் பொறுத்தவரையில் முக்கியமான ஆண்டு. ஏனெனில், ஒரு பொருளாதார நெருக்கடிக்கு பின்னரான அரசியலை வழிநடத்தப் போகிறவர்களை தீர்மானிக்கும் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. இதனை எவ்வாறு கையாள்வது என்பதில் தமிழ்த் தேசிய தரப்புகளிடம் ஒன்றுபட்ட கொள்கை நிலைப்பாடு ஒன்று தேவை. அடுத்தது இந்தியாவுக்கும் இது ஒரு முக்கிய ஆண்டு. செல்வாக்குமிக்க பாரதிய ஜனதா கட்சியின் செல்வாக்கை தீர்மானிக்கும் காலம். ஏற்கனவே, பிரதமர் மோடிக்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் கடிதங்களை அனுப்பியிருந்தன. கடிதங்களை அனுப்பிவிட்டு, புதுடில்லி வீடு தேடிவந்து சந்திக்கும் என்று காத்திருப்பதல்ல அரசியல். 13ஆவது திருத்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவை நோக்கி எவ்வாறான அணுகுமுறையுடன் செல்வது என்னும் தீர்க்கமான தீர்மானத்துடன் இந்த ஆண்டுக்கான திட்டத்தை இறுதி செய்ய வேண்டும். இதற்கு முன்னர் அனைவரும் ஒரு புள்ளியில் சிந்திப்பதற்கான கூட்டு வேலைத்திட்டங்களை கண்டுபிடிக்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தல் அதற்கான ஒரு சிறந்த களமாக இருக்க முடியும்.

# ஏழு இலட்சம் குடும்பங்கள் அன்றாடம் உண்பது கடனில்

## ஆய்வில் வெளியானது தகவல்

*கொழும்பு, ஜன. 07*

*இலங்கையில் 6 இலட்சத்து 97, 800 குடும்பங்கள் தமது அன்றாட உணவுக்காக கடன் பெறுவதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளியியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.*

*மக்கள் தொகை மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் சமீபத்திய ஆய்வு அறிக்கையை மேற்கோள் காட்டி அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.*

*இந்நாட்டில் வாழும் மொத்த குடும்பங்களின் எண் ணிக்கை 31 இலட்சத்து 29 ஆயிரத்து 300 ஆகும். உணவுக்காகக் கடன் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை 22.3 சதவீதமாக இருப்பதாகப் பேராசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.*

*இதேவேளை, கிட்டத்தட்ட 370,000 குடும்பங்கள் கடனை மீளச் செலுத்துவதற்காக கடன் பெற்றுள்ளனர். 491,000 குடும்பங்கள் பொருளாதார தேவைகளுக்காக கடன் பெற்றுள்ளதாகவும் வசந்த அத்துக்கோரள தெரிவிக்கிறார்.*

*கட்டடங்களை நிர்மாணிப்பதற்கும் புனரமைப்பதற்கும் 53,200 குடும்பங்கள் கடன் பெற்றுள்ளனர். 2022ஆம் ஆண்டுக்கு பின்னர் 688,000 குடும்பங்கள் கடனாளிகளாக மாறியுள்ளன. இவர்களில் பெரும்பாலானோர் நகைகள் அல்லது சொத்துகளை அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளனர். 970,000 குடும்பங்கள் அடமான நடவடிக்கை மூலம் கடன் பெற்றுள்ளனர்.*

*இதற்கு மேலதிகமாக 970,00 குடும்பங்கள் வங்கிகளிலும், 272,250 குடும்பங்கள் நிதி நிறுவனங்களிலும், 303,500 குடும்பங்கள் பணதரகர்களிடமிருந்தும் கடன் பெற்றுள்ளதாகவும் வசந்த அத்துகோரள மேலும் தெரிவித்தார்.*

# மின்சார சட்டமூலத்தை மீளப் பெற கோரும் போராட்டம் வலுப்பெறுகிறது

*கொழும்பு, ஜன. 07*

*தேசிய வளங்களை விற்பனை செய்வதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளதாக கூறப்படும், சட்டமூலத்தை மீளப் பெறக் கோரி நாற்பதுக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் மூன்று நாட்களாக நடத்திய போராட்டத்திற்கு அரசு உரிய பதில் அளிக்காததால், மின்சார சபை ஊழியர்கள் பணிக்குத் திரும்பாதது அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது.*

*கொழும்பில் உள்ள இலங்கை மின்சார சபையின் தலைமையகத்திற்கு முன்பாக ஜனவரி 5ஆம் திகதி ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நுகர்வோர் ஒருங்கிணைப்பு அதிகாரிகள் சங்கத்தின் சிரேஷ்ட ஆலோசகர் பிரியந்த விக்ரமசிங்க,*

*"நாட்டை இருளில் தள்ளத் தயாரில்லை, ஆனால், ஊழியர்களால் அதிகபட்சமாக செய்ய முடிந்ததை செய்கிறார்கள்." எனத் தெரிவித்தார்.*

*மின்சார சபையை மறுசீரமைப்பதாக தெரிவித்து, அரசாங்கம் இலங்கை மின்சார சபை சட்டத்தை பயன்படுத்தி தேசிய வளங்களை விற்பனை செய்வதாக குற்றம் சுமத்தி, நாற்பதுக்கும் மேற்பட்ட மின்சார ஊழியர்களின் தொழிற்சங்கங்கள் இணைந்து முன்னெடுத்த மூன்று நாள் தொடர் போராட்டம் ஜனவரி 3ஆம் திகதி இலங்கை மின்சார சபை தலைமையகத்திற்கு முன்பாக ஆரம்பமானது.*

*இருபத்து மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மின்சார ஊழியர்களின் போராட்டம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு "திமிர்பிடித்த அரசாங்கம்" குறைந்தபட்சம் ஒரு வாய்ப்பைக்கூட வழங்கவில்லை என சிரேஷ்ட தொழிற்சங்கத் தலைவர் பிரியந்த விக்ரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.*


*அரசாங்கத்திற்கு எந்தளவிற்கு திமிர் பிடித்துள்ளது என்றால், இருபத்து மூவாயிரம் தொழிலாளர்கள் வீதியில் அமர்ந்து போராட்டம் நடத்தும் போது, ஒரு கலந்துரையாடலுக்குக் கூட அவர்கள் அழைப்பு விடுக்கவில்லை.*

*தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தம் செய்வதற்கான பின்னணியை உருவாக்கி, நாட்டை இருளில் மூழ்கடித்துவிட்டு, தொழிற்சங்கங்கள் மீது பழியைப் போட அரசாங்கம் காத்திருப்பதாக தெரிவிக்கும் தொழிற்சங்க தலைவர், நாட்டு மக்களைப் பற்றி அரசாங்கம் பொருட்படுத்துவதில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.*

*இருபத்து மூவாயிரத்துக்கும் மேற்பட்ட அத்தியாவசிய சேவை ஊழியர்கள் வேலையை விட்டு, சாவியைக் கொடுத்துவிட்டு வீதிக்கு வந்தால் அரசாங்கம் வீட்டுக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்படும் என தொழிற்சங்கத் தலைவர் வலியுறுத்தினார்.*

*அரசு முன்வைத்துள்ள புதிய மின்சார சட்டமூலத்தின் ஊடாக, மின்சார சபை ஊழியர்களின் நிதியை கொள்ளையடிக்க அரசு தயாராக உள்ளதாக, மூன்று நாள் போராட்டம் குறித்து, 41 மின்சார தொழிற்சங்கங்கள் இணைந்து வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.* *(அ)*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# மலையக மக்களின் மாற்றத்திற்காக கல்வி ஒன்றினாலேயே புரட்சியை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிய அருள்சாமி!

**க.கிஷாந்தன்**



மலையக மக்களின் மனங்களில் என்றும் நீங்கா இடம் பிடித்த ஒரு புரட்சியாளர் அமரர் அருள்சாமி அவர்கள். தனது இறுதி நாட்கள் வரை மக்களின் உரிமைக்காகவும் அவர்களின் வளர்ச்சிக்காகவும் பாடுபட்டவர் ஆவார். நேற்று 06.01.2024 அவரது ஐந்தாவது ஆண்டு சிரார்த்த தினமாகும்.

அமரர் அருள்சாமி அவர்கள் மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சராகவும் பாராளுமன்ற உறுப்பினராகவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவராகவும் மலையக மக்களின் மாற்றத்திற்காக கல்வி ஒன்றினாலேயே புரட்சியை ஏற்படுத்த முடியும் என்ற ஆணித்தனமான நம்பிக்கையில் கல்வித் துறைக்கும் தொழிற்சங்க துறைக்கும் எண்ணிலடங்கா சேவைகள் ஆற்றியவர்.

மலையகத்தின் பெருந்தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் அரசியல் பாசறையில் வளர்ந்த அருள்சாமி அவர்கள் பல தொழிற்சங்க நடவடிக்கைகளையும் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் முன்னின்று செயல்பட்டார்.

மும்மொழியிலும் சரளமாகப் பேசக்கூடிய புலமையைப் பெற்றிருந்தவர் அவர். தொழிற்சங்க போராட்டங்களில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றிய செயல் வீரர் எனலாம்.

மத்திய மாகாணத்தில் 1988ஆம் ஆண்டு முதலாவது மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். அடுத்து வந்த மாகாண சபைத் தேர்தல்களிலும் போட்டியிட்டு வெற்றி பெற்றதுடன், மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சராக பணி புரிந்தவர். இக்காலத்தில் மலையக பாடசாலைகளின் அபிவிருத்தியில் அர்ப்பணிப்புடன் உழைத்தவர் அருள்சாமி.

காத்திருப்பு பட்டியல் மூலம் பாராளுமன்ற அங்கத்தவராக அங்கம் வகித்தவர். இ.தொ.கா தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமானால் 2018ஆம் ஆண்டு பெருந்தோட்ட மனிதவள நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வின் போது தன்னை முழுமையாக அர்ப்பணித்து சம்பள உயர்வை பெற்றுக் கொடுக்க பாடுபட்டவர்.



கலை, கலாசார ரீதியாகவும், சமூக மேம்பாட்டு விடயங்களிலும் அக்கறை கொண்டு செயற்பட்டு வந்திருக்கின்றார்.

இ.தொ.கா வின் வளர்ச்சியில் அருள்சாமிக்கு பெரும் பங்கு உண்டு. எத்தனை நெருக்கடிகள் வந்தாலும் அஹிம்சை வழியில் அமைதியாக போராடினால் வெற்றி கொள்ள முடியும் என்பதை எடுத்துக் காட்டியவர் அமரர் அருள்சாமி.

தொழிற்சங்கத் துறையில் மனிதரில் மாணிக்கமாக அமரர் அருள்சாமி விளகுகின்றார். அவர் மறைந்து ஐந்து வருடங்கள் சென்றாலும், அன்னார் முழு மலையக மக்களின் உள்ளங்களில் என்றுமே வீற்றிருக்கின்றார்.

# இந்தவார ராசிபலன் 07.01.2024 - 13.01.2024

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - மார்கழி 22
நல்ல நேரம்: 7.30 - 9.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : தசமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

நேர்வழியில் சிந்தித்து செயலாற்றுவீர்கள். நண்பர்களால் நல்ல அனுபவங்களைப் பெறுவீர்கள். பொருளாதார நிலை ஏற்றமாகவே இருக்கும். பெற்றோருக்கு மருத்துவச் செலவுகள் செய்ய நேரிடும். உத்தியோகஸ்தர்கள் சில பிரச்னைகளைச் சந்திப்பீர்கள். வியாபாரிகள் வியாபார முறைகளில் மாற்றம் செய்வீர்கள். விவசாயிகள் புதிய பயிர்களை பயிரிடுவீர்கள். அரசியல்வாதிகள் கவனமாக இருக்கவும். கலைத் துறையினர் நிலையான வருவாய் பெறத் திட்டமிடுவீர்கள். பெண்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

உங்கள் வேலைகளைத் தடையில்லாமல் செய்து முடிப்பீர்கள். புதிய முயற்சிகளில் லாபம் பெறுவீர்கள். சுப காரிய விஷயங்களில் சிக்கல்களைத் தீர்ப்பீர்கள். சுறுசுறுப்புடன் பணியாற்றுவீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். வியாபாரிகளுக்கு உதவிகள் கிடைக்கும். விவசாயிகள் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். அரசியல்வாதிகள் உஷாராக இருக்கவும். கலைத் துறையினர் கவனமாக செயல்படவும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

தொழிலில் புதிய அணுகுமுறைகளைக் கையாள்வீர்கள். தன்னம்பிக்கையுடன் திட்டங்களைத் தீட்டுவீர்கள். புதிய வாய்ப்புகள் தேடி வரும். குழந்தைகளின் எதிர்காலம் பற்றி யோசிப்பீர்கள். உத்தியோகஸ்தர்கள் அலுவலகப் பிணக்குகளுக்குத் தீர்வு காண்பீர்கள். வியாபாரிகள் நல்ல முறையில் வியாபாரத்தை நடத்துவீர்கள். விவசாயிகள் லாபம் அடைவீர்கள். அரசியல்வாதிகளுக்கு புதிய தொண்டர்கள் கிடைப்பார்கள். கலைத் துறையினரின் புகழ் உயரும். பெண்கள் விட்டுக் கொடுத்து நடப்பீர்கள். மாணவர்கள் உழைப்புக்கேற்ற பலன் பெறுவார்கள்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

தொழிலில் புதிய இலக்குகளை எட்டுவீர்கள். உடல் ஆரோக்கியம், மன வளம் சிறக்கும். குடும்பத்தில் நிம்மதியான போக்கை நிலை நாட்டுவீர்கள். உத்தியோகஸ்தர்களின் நன்னடத்தையை பிறர் பாராட்டுவார்கள். வியாபாரிகள் விழிப்புணர்வோடு இருந்து புதிய முயற்சிகளை மேற்கொள்வீர்கள். விவசாயிகள் காய்கறி, பழங்களைப் பயிரிடுவீர்கள். அரசியல் வாதிகள் சிறிது மனக் குழப்பம் அடைவீர்கள். கலைத் துறையினர் புதிய முயற்சிகளை மேற்கொள்வீர்கள்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

தேவையற்ற விஷயங்களை மனதிலிருந்து தூக்கி எறிவீர்கள். தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள். அரசு உதவிகள் கிடைக்கும். உங்களுக்குக் கீழ்பணியாற்றுவோர் உதவிகளைச் செய்வார்கள். உத்தியோகஸ்தர்கள் அலுவலகத்தில் விறுவிறுப்பாகப் பணியாற்றுவீர்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். விவசாயிகள் பிறருக்கு உதவுவீர்கள். அரசியல்வாதிகள் மேலிடத்தின் அன்பைப் பெறுவீர்கள். கலைத் துறையினர் நேர்த்தியாகப் பணியாற்றுவீர்கள். பெண்கள் பொருளாதாரத்தில் உயர்வைக் காண்பீர்கள்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

அனைத்துக் காரியங்களிலும் யோசித்து இறங்குவீர்கள். வெளியூர் பயணங்களில் புதிய அனுபவம் கிடைக்கும். கடன் வசூலாகும். உத்தியோகஸ்தர்கள் சக ஊழியர்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபடுவீர்கள். வியாபாரிகள் கொடுக்கல்வாங்கலில் லாபம் அடைவீர்கள். விவசாயிகள் சாதகமான திருப்பங்களைக் காண்பீர்கள். அரசியல்வாதிகள் புதிய பயணம் மேற்கொள்வீர்கள். கலைத் துறையினர் யோசித்து செயல்படுவீர்கள். பெண்கள் பெரியோரை மதித்து நடப்பீர்கள். மாணவர்கள் விளையாட்டுகளில் வெற்றி பெறுவீர்கள்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

தொழிலில் உற்சாகத்துடன் பணியாற்றுவீர்கள். உங்களை பிறர் புரிந்துகொள்வார்கள். பிறருக்கு பண உதவிகளைச் செய்வீர்கள். எதிர்ப்புகள் மறையும். உத்தியோகஸ்தர்கள் அலுவலகத்தில் பாராட்டப்படுவார்கள். வியாபாரிகள் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். விவசாயிகள் பூச்சித் தொல்லைகளைச் சமாளித்துவிடுவீர்கள். அரசியல்வாதிகள் எவரையும் பகைத்துக் கொள்ள வேண்டாம். கலைத் துறையினர் எதிர்பார்த்த பண உதவிகளைப் பெறுவீர்கள். பெண்கள் சுப நிகழ்ச்சிகளை நடத்துவீர்கள். மாணவர்கள் பிறர் பிரச்னைகளைத் தீர்ப்பீர்கள்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

சமூகத்தில் உயர்ந்தவர்களைச் சந்திப்பீர்கள். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். பொருளாதாரச் சிக்கல்கள் குறையும். குடும்பத்தினரிடம் விட்டுக் கொடுத்து நடப்பீர்கள். உத்தியோகஸ்தர்கள் கருத்து வேறுபாடுகளை மறப்பீர்கள். வியாபாரிகள் புதிய தொழில்களைத் தொடங்கலாம். விவசாயிகள் கடன்களை அடைப்பீர்கள். கலைத் துறையினர் பிறரிடம் ஒற்றுமையாக இருப்பீர்கள் வருவீர்கள். மாணவர்களுக்கு உடனிருப்போர் உறுதுணையாக இருப்பார்கள்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தொழிலில் மாற்றங்களைச் செய்வீர்கள். பணவரவு கூடும். கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றுவீர்கள். மழலை பாக்கியம் உண்டாகும். உத்தியோகஸ்தர்களுக்கு அலுவலக ரீதியான பயணங்களால் நன்மை உண்டாகும். வியாபாரிகள் தனித்தே முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். விவசாயிகள் கால்நடை பராமரிப்புக்கு செலவு செய்ய நேரிடும். அரசியல்வாதிகள் தீர ஆலோசித்து செயல்படவும். கலைத் துறையினர் நன்கு உழைப்பீர்கள். பெண்களுக்கு ஆன்மிக ஈடுபாட்டால் மனம் தூய்மை அடையும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

சாதுர்யமாகப் பேசி காரியங்களைச் சாதிப்பீர்கள். மனதுக்குப் பிடித்தமான பணிகளில் ஈடுபடுவீர்கள். மதிப்பும் மரியாதையும் உயரும். உத்தியோகஸ்தர்கள் பதவி உயர்வுக்கு முயற்சி செய்வீர்கள். வியாபாரிகள் போட்டிகளை சமாளிப்பீர்கள். விவசாயிகளுக்கு பொருளாதாரம் சீரடையும். அரசியல்வாதிகள் தொண்டர் களின் அன்பைப் பெறுவீர்கள். கலைத் துறையினருக்குப் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். பெண்கள் குடும்பத்தினருடன் சகஜமாகப் பழகுவீர்கள். மாணவர்கள் ஆசிரியர்களின் அறிவுரையைக் கேட்பீர்கள்.


### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

சிறிது தாமதமானாலும் பண வரவு உண்டு. குடும்பப் பிரச்னைகள் தீரும். குழந்தைகள் உங்கள் சொல் கேட்பார்கள். தொழிலில் புதிய முயற்சிகளைப் பெறுவீர்கள். உத்தியோகஸ்தர் களுக்கு அலுவலகத்தில் சிறப்பிடம் உண்டு. வியாபாரிகள் வியாபாரத்தைப் பெருக்குவீர்கள். விவசாயிகளுக்கு லாபம் அதிகரிக்கும். அரசியல்வாதிகள் கட்சித் தலைமையை அனுசரித்து நடப்பீர்கள். கலைத் துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். பெண்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. மாணவர்களுக்கு படிப்பில் ஆர்வம் அதிகரிக்கும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

உங்கள் திறமைகள் வெளிப்படும். உடல் நலம், மனவளம் மேம்படும். சிலருக்கு திடீர் அதிர்ஷ்டம் உண்டு. உதவிகள் கேட்காமலேயே கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு உபரி வருவாய் கிடைக்கும். வியாபாரிகளுக்கு போட்டிகள் குறையும். விவசாயிகளுக்கு கால்நடைகளால் லாபம் உண்டு. அரசியல்வாதிகளின் செல்வாக்கு உயரும். கலைத் துறையினர் சக கலைஞர்களுடன் நட்புறவுடன் இருப்பீர்கள். பெண்களுக்கு கணவருடனான ஒற்றுமை அதிகரிக்கும். மாணவர்கள் சோம்பேறித்தனத்தை விட்டொழித்து அதிகாலையில் எழுந்து படிப்பீர்கள்.

# ஒரு சுகமான தொடக்கத்தின் தொடர் பயணம்



சென்னை மடல்
-பகவான் சிங்-

இரண்டு நாட்களுக்கு முன் லண்டனிலிருந்து ஈழ நண்பர் ஒருவர் என்னை அழைத்து, புத்தாண்டு தினமான கடந்த திங்களன்று 'ஈழநாடு' இதழில் 'ஊர்க் குருவி' பகுதியைப் படித்தீர்களா என்று கேட்டார். இல்லை என்று பதிலளித்த நான், முக்கியமான, சுவாரஸ்யமான விஷயம் எதையும் தவறவிட்டுவிட்டேனோ என்று விசாரித்தேன். "நேரம் கிடைக்கும் போது படியுங்கள்" என்று அவர் கூறினார். பின்னர் நாங்கள் மற்ற பிற விஷயங்கள் பற்றிப் பேசினோம். அடுத்த நாள் மீண்டும் அழைத்த அவர், செவ்வாயன்று 'ஊர்க்குருவி' பகுதியைப் படித்தீர்களா என்று கேட்டார். அது முந்தைய தினக் கட்டுரையின் தொடர்ச்சி என்று அவர் கூறியதும் எனக்கு ஆர்வம் அதிகமாகி, "ஏன், அதில் என்னையோ எனது ஞாயிறு கட்டுரையையோ பற்றி ஏதேனும் வந்திருக்கிறதா?" என்றேன். "இல்லை, இல்லை, அதைப் படித்துவிட்டு நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று எனக்குச் சொல்லுங்கள்." என்றார். பிறகு அந்த வட்ஸப் அழைப்பில் நாங்கள் பல விஷயங்கள் பற்றிப் பேசினோம். கடந்த வாரம், எனது சொந்தப் பணிகள் காரணமாக எனக்குப் படிக்க நேரம் கிடைக்கவில்லை. ஆனால், வெள்ளிக்கிழமை இக்கட்டுரையை எழுத அமர்ந்த போது, 'ஊர்க்குருவி' பகுதி பற்றி நண்பர் கூறியது நினைவு வரவே, முதலில் அதைப் படிக்க முடிவுசெய்தேன். அவை இரண்டும் மிகவும் சுவாரஸ்யமாக இருந்தன. முன்னரே படிக்கத் தவறியது குறித்து வருந்தினேன். முன்பே படித்திருந்தால், லண்டன் நண்பரிடம் எனது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டிருப்பேன். ஊர்க்குருவியின் அந்த உரையை இங்கு விவாதிக்க அதிக நேரத்தை நான் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. எனது அறிவார்ந்த 'ஈழநாடு' வாசகர்கள் அதை ஏற்கெனவே படித்திருப்பீர்கள். நண்பர் குருவியார், சில சிறிய சரிவுகளை விட்டிருக்கிறார் என்பதை மிகப் பணிவுடன் எடுத்துக்கூற, ஓரிரு விஷயங்களை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

1978இல் பிரஸ் ட்ரஸ்ட் ஒபவ் இந்தியா (PTI) நிருபராகத் தொடங்கியது எனது பத்திரிகையுலகப் பயணம். இந்தியாவில் மதிக்கப்படும் மிகப்பெரிய செய்தி நிறுவனமான பிடிஐ-இன் ஆசிரியர்கள், பொறுப்பற்ற மற்றும் தவறான செய்திகளால் தங்கள் நிறுவனத்தின் நற்பெயர் பாதிக்கப்படக்கூடாது என்பதில் மிகுந்த அக்கறை கொண்டவர்கள். பெரிய, சிறிய செய்தித் தாள்கள், தொலைக்காட்சி சனல்கள், அரசுக்குச் சொந்தமான வானொலி, தொலைக் காட்சிகள் மட்டுமல்லாமல் அநேகமாக அனைத்து சர்வதேசச் செய்தி நிறுவனங்களும் பிரிஐ-இன் சந்தாதாரர்களே. எனது முதல் பயிற்சிக் களமான பிரிஐ, அந்த இளம் வயதில் என்னைச் செம்மையாகச் செதுக்கியது. அது ஒரு சுகமான, சுவாரஸ்யமான தொடக்கம். எனது மனதுக்குகந்த 'ஈழநாடு' உட்பட அனைத்துப் பத்திரிகையாளர்களுக்கும் இந்தத் 'திருப்தி' என்ற உணர்வு புரியும் என்பது நிச்சயம்.

எனது பயணத்தின் அடுத்த படியாக, 1982இல் 'த வீக்' பத்திரிகையில் சேர்ந்தேன். கேரளாவின் 'மலையாள மனோரமா' பிரசுரம், ஓர் ஆங்கிலப் பத்திரிகை தொடங்க முடிவு செய்தது. தெரியாதவர்களுக்குச் சொல்கிறேன் - மலையாள மனோரமா இந்தியாவின் மிகப் பழைமையான, பெரிய பிரசுர நிறுவனமாகும். 125 ஆண்டு வரலாற்றையும் 25 லட்சம் சந்தாதார்களையும் கொண்ட ஒரு பத்திரிகை அது. ஊடக உலகில், அச்சு, தொலைக்காட்சி, டிஜிட்டல், மின்னணு வர்த்தகம் என்று அனைத்துத் தளங்களிலும் இந்தியாவில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத முன்னோடியாகத் திகழும் நிறுவனம்.

அதற்கடுத்த ஆண்டில், வழக்கமான செய்தி சேகரிப்பிலிருந்து என் பாதை மாறியது. இராமேஸ்வரத்தில் அலைலையாய் அகதிகளாக இறங்கிய ஈழத் தமிழர்களின் சோகக் கதைகளைச் சேகரித்து அந்தக் கடலோரத்திலிருந்து எழுதிய எனது கட்டுரைகளும் நான் எடுத்த படங்களும் 'த வீக்' பத்திரிகையில் என் முதல் கவர் ஸ்டோரியாக வந்தது. அன்று, பசியுடன் அலறிக் கொண்டிருக்கும் குழந்தைகளைத் தங்கள் மடியில் வைத்துக் கண்ணீருடன் இறங்கிய பெண்களையும், தள்ளாடும் முதியவர்களையும் அலுமினியப் பாத்திர மூட்டைகளைச் சுமந்து வரும் ஆண்களையும் பேட்டி கண்டபோதே என் கலங்கிய மனம் ஒரு துயரமான உண்மையைப் புரிந்துகொண்டது - இந்த ஈழத் தமிழர்களின் பிரச்னை ஒரு மாபெரும் மனித உரிமை மீறல் கொடுமை, இது நீண்ட காலத்துக்குத் தலைப்புச் செய்தியாக நிற்கும் என்பதும் இந் நிலை தீரும் வரையிலோ எனது வாழ்வின் இறுதி வரையிலோ, எனது பத்திரிகையுலகப் பயணம், ஈழப் போராட்டம் என்ற யாகத் தீயின் ஆ/ஹுதியாகத் தொடரும் என்பதும். வரும் ஒகஸ்ட் மாதம் எனக்கு 74 வயது. எனது காலத்துக்குள் இந்தத்



தமிழர் சோகத்துக்கு ஒரு நிரந்தரத் தீர்வைப் பார்க்க நான் துடிக்கிறேன்.

'த வீக்' பத்திரிகைக்கான எனது அடுத்த பெருமுயற்சி, போர்ப் பகுதிக்கே படகுப் பயணம் 1985இல் மேற்கொண்டது. நெருங்கிய நண்பரும் ரெலோ தலைவருமான சிறி சபாரத்தினம் எனது கோரிக்கையை ஏற்று, ஒரு படகை ஏற்பாடுசெய்து கொடுத்தார். 'த இந்து' பத்திரிகையில், இலங்கைக் கடற்படை ஈழப்படகை மூழ்கடித்துப் போராளிகள் பலர் கடலில் மடிய நேர்ந்த அவலத்தை அன்றாடம் தலைப்புச் செய்தியாகப் பார்த்து வந்த எனது மனைவியிடம் என் பயணத்தைப் பற்றிச் சொன்னேன். அவர் அதிர்ச்சி அடைந்தார், நான் மன்றாடினேன். பிடிவாதமாக அவர் சிறியுடன் பேசியபோது இது ஓர் அபாயமான முயற்சிதான் என்பதை அவரும் ஒப்புக் கொண்டார். இறுதியாக, எனது மனைவி இந்த இரகசியப் படகுப் பயணத்துக்குத் தன் மறுப்பை விலக்கிக் கொண்டார். ரெலோ போராளிகளுடன் அவர்களது ஜீப்களிலும் மோட்டர் பைக்குகளிலும் சைக்கிள்களிலுமாக சுமார் 10 நாட்கள் ஈழப் பகுதிகளில் பயணித்தபோது, திடீரென்று வானில் வட்டமிடும் இராணுவ ஹெலிகாப்டர்களின் பார்வைக்குத் தப்பிப் பிழைத்து, அங்கங்கு மக்களுடன் பேசி, அவர்களது அவல வாழ்வைப் படம் பிடித்தேன். நாடு திரும்பும்போது, எங்கள் படகு இலங்கைக் கடற்படைத் தாக்குதலுக்கு உள்ளானது.

அலையாடும் கடலில் எங்களைச் சுற்றித் துப்பாக்கி குண்டுகள் ஆங்காங்கே பறக்க, ஒரு மணி நேரத்துக்கும் மேலாக அந்த விரட்டல் தொடர்ந்தது. ஓர் இளம் போராளியை இழந்து, இராமேஸ்வரம் அருகே மல்லிப்பட்டினத்தில் கரையை அடைந்து, அந்த இளம் சிறுவனை ஒரு பாயில் சுற்றிப் புதைத்தோம். பிறகு, தாங்க முடியாத முதுகு வலியுடன் பஸ்ஸில் ஏறி இராமநாதபுரம் சென்று ஒரு ஹோட்டலில் இருந்து மனைவிக்கு போன் செய்து, 'அம்மா, நான் வந்து விட்டேன்' என்றேன். பதிலுக்கு அவர் கதறி அழுதது எனக்கு இன்றும் நினைவில் நிற்கிறது. அந்தப் படகுப் பயணம் குறித்து அதிக விவரம் இங்கு தேவையில்லை ஒரே ஒரு விஷயத்தை மட்டும் பதிவு செய்தால் போதும் - வட இலங்கையின் போர்ப் பகுதியில் தமிழ் மக்கள் சந்தித்த கொடுமைகளை உலகிற்குக் கொண்டு செல்லக் களமிறங்கி, ஆபத்தான படகுப் பயணம் மேற்கொண்ட முதல், அல்லது அநேகமாக ஒரே இந்தியப் பத்திரிகையாளன் நான். 'த வீக்' பத்திரிகையில் வெளியான எனது செய்தித் தொகுப்பு பல அயல் மொழிகளில் பெயர்க்கப்பட்டு, சர்வதேச வாசகர்களிடம் ஈழத் துயரத்தைக் கொண்டு செல்வதில் சிறிதளவேயாயினும் உதவியுள்ளன.

இப்போது இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன்? எனது இனிய குருவி நண்பர் (அவரை வேறு எப்படியும் குறிப்பிட முடியவில்லை, ஏனெனில், அவர் பெயர் தெரியாது, ஆணா பெண்ணா? இளையவரா முதியவரா? எதுவும் தெரியாது) தனது திங்கட்கிழமைக் கட்டுரையைக் காட்டமாகத் தொடங்கிய விதத்துக்கு எனது சிறுபிள்ளைத் தனமான எதிர்வினையாக இந்தப் படகு நினைவூட்டல் இருக்கலாம். அதில் அவர், "ஈழத் தமிழர் பிரச்னைகளில் தமிழகத்தின் பார்வை அல்லது புரிதல் எப்படிப்பட்டது என்பதைச் சில வாரங்களுக்கு முன்னர் இந்தப் பத்தியில் எழுதியிருந்தேன். அது நமது பகவான் சிங்குக்கும் பொருத்தமானதோ என்று எண்ணத் தோன்றுகிறது" என்று குறிப்பிட்டிருந்தார். அதாவது, என் நண்பர் என்னையும் ஒரு பெரும் கும்பலுக்குள் தூக்கியெறிந்து விட்டார். மகிழ்ச்சி. தன்னுடைய சிந்தனைக்கப்பாற்பட்டோர் தமக்கோர் எதிரி என எண்ணுவது நல்லதோர் சித்தாந்தம்தான் தமிழ்ச் சமுதாயத்திற்கும் அவர் மாசுபட்டோரென்பது வியப்பான புரிதல்.

உங்கள் குடும்பத்தினரும் நெருங்கிய நண்பர்களும் உங்கள் நேரத்திற்காகக் காத்திருக்கும் இப்பொன்னான ஞாயிறு காலைப் பொழுதை நான் வீணடிப்பது சரியன்று. ஆனால், எனது கடந்த ஞாயிறு கட்டுரை குறித்த குருவி நண்பரின் புரிதலில் சில தெளிவுகளை ஏற்படுத்த எனக்குச் சில நிமிடங்கள் ஒதுக்குங்கள். முதலில், எனது 'ஈழநாடு' கட்டுரையை வாட்ஸப்பில் ஜிரிஎவ்-இன் சுரேன் சுரேந்திரன் பலருடன் பகிர்வதாகவும் எனது கருத்துகளுடன் சுரேன் ஒத்துப்போவதை இது காட்டுவதாகவும் குருவி குறிப்பிட்டிருந்தார். அப்படியே இருக்கட்டும் இல்லையென்றால் எனது கட்டுரையை சுரேன் பகிர்ந்திருக்க மாட்டார். அதில் தவறேதும் இல்லை ஒரு பத்திரிகையாளன் தனது கட்டுரையில் குறிப்பிடப்படுபவருக்குச் சுவைக்காத விஷயங்களை எழுதக்கூடாது என்ற எந்த விதியும் இல்லை. பத்திரிகையாளனுக்கு இருக்கும் ஒரே விதி, சரியாக, உண்மைகளை, மனசாட்சிக்கு விரோதமின்றி, பொது நலனுக்காக எழுதவேண்டும் என்பதே. அப்படிச்

செய்யும்போது, நிருபருக்கு, எழுதப்படும் நபரிடமிருந்து பாராட்டும் நன்றியும் கிடைக்கலாம் அல்லது அநேக சமயங்களில் அவர் மற்றும் அவரது ஆதரவாளர்களிடமிருந்து கடுமையான விமர்சனங்களும் கிடைக்கலாம். இது, பத்திரிகையாளனுக்கு உள்ள இயல்பான சிரமம். அதற்குப் பிறகு குருவி ஒரு நிலையில்லாத, கணிக்கமுடியாத கருமேகங்களுக்கு நடுவே பறக்கிறது. "அதைவிட, இரண்டு விடயங்களை பகவான் சிங் கேள்விக்கு உட்படுத்திவிட்டு அவற்றுக்கான பதில்களை சுரேனிடமிருந்து பெற்று எழுதியிருக்கிறார். அந்தக் கட்டுரையைப் படிக்கத் தொடங்கியபோதே, சுரேன் தனது பிரகடனத்தை 'மார்கெட்' பண்ணுவதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்துகொண்டிருக்கிறார் என்பதையும், அதற்காகவே அவர் பகவான் சிங்கிடமும் பல தடவை பேசியிருக்கிறார் என்பதும், அதன் விளைவுதான் இந்தக் கட்டுரை என்பதையும் கூட உணர முடிந்தது" என்று எழுதியிருக்கிறார்.

மக்களுக்குச் சேவை செய்ய விரும்பும் ஒரு அரசியல்வாதியோ, ஒரு பெரு நிறுவன அமைப்போ, தன்னார்வ அமைப்போ, தனது பணிக்கான அதிகபட்ச பலனைப் பெற அதை விளம்பரப்படுத்துவதில் எந்தத் தவறும் இல்லை. சர்ச்சைக்கிடமளிக்காத ஊடக அறிவிப்புகள் அல்லது பேட்டிகள், விளம்பரங்கள் அல்லது சில நேரங்களில் வாய்வழியாகவகூட இந்த ஆதரவைத் திரட்டலாம். இது உலகெங்கிலும் எல்லாக் காலங்களிலும் பின்பற்றப்பட்ட வழிமுறைதான். இதில் எதுவும் சட்டவிரோதமில்லை, பத்திரிகை தர்மத்துக்கு முரணில்லை, குற்றமில்லை. எனது பார்வையில், பொது நலனுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய ஒரு திட்டத்தை முன்னெடுக்கும் நேர்மையற்ற நபர் அல்லது நிறுவனத்தின் தீய நோக்கத்துக்கு ஒரு பத்திரிகையாளன் துணை போவதுதான் தவறு, முறையற்றது, தர்ம விரோதமானது, குற்றம், பாவச் செயலும் கூட. இனிய குருவி நண்பர் எனது கட்டுரையைத் தவறாகப் புரிந்து கொண்டு, சுரேன் சுரேந்திரனும் நானும் இமாலயப் பிரகடனம் குறித்துத் தொடர்ந்து பேசி வந்ததாக முடிவு செய்துவிட்டார் போலும். ஆனால், எனது கட்டுரையில் ஜிரிஎவ் தலைவர் இந்த விவரங்களைப் பிரகடனத்திற்குப் பிறகு வாட்ஸப்பில் பகிர்ந்திருந்தார் என்று நான் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தேன். மேலும், இந்த முதிய நண்பனிடம் இதைப் பகிர்ந்ததற்காக நான் அவருக்கு நன்றியும் தெரிவித்திருந்தேன். அந்த நன்றி நவிலலில் இருந்த கிண்டலை சுரேன் புரிந்து கொண்டிருப்பார் என்று நான் நம்புகிறேன் - காரணம், அவர் பல ஆண்டுகளாக என்னுடன் தொடர்பில் இல்லை என்பதையும், இமாலயப் பிரகடனம் பற்றி இப்போது திடீரென்று வாட்ஸப்பில் அனுப்புகிறார் என்பதையும் தான் அப்படிக் குறிப்பிட்டிருந்தேன்.

"போர்க் குற்ற விசாரணை மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பாக தேசிய உரையாடலை ஜனவரியில் 25 மாவட்டங்களிலும் தொடங்கப்போவதாக

(14ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணை வெல்ல இணைந்து பறப்போம்!

# ஜனாதிபதித் தேர்தல்: ரணிலுக்கான வாய்ப்புகளும் சவால்களும்!





கந்தையா அருந்தவபாலன்

இந்த ஆண்டின் பிற்பகுதியில் நாட்டில் நடக்குமென எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடவுள்ளதாக ரணில் இன்னும் வெளிப்படுத்தாது விட்டாலும் அவர் போட்டியிடுவதற்கான வாய்ப்பு அதிகம் காணப்படுவதுடன் அதற்கு வேண்டிய புறச்சூழலை உருவாக்கும் முயற்சிகளில் அவரும் அவரைச் சார்ந்தோரும் மிக மும்முரமாக ஈடுபட்டு வருவதை அவதானிக்கவும் முடிகிறது. ஜனாதிபதி என்ற வகையிலான உத்தியோகபூர்வச் சந்திப்புகள், மக்கள் சந்திப்புகள், அரசியல் கட்சித் தலைவர்களுடனான சந்திப்புகள், மக்களுக்கு எதிர்கால நம்பிக்கையூட்டும் வெளிப்படுத்தல்கள், சிறுபான்மை இனங்கள்,குழுக்கள், மதத்தினருக்கு பல்வேறு வாக்குறுதிகள் வழங்குதல் எனப் பல்வேறு செயற்பாடுகளில் ரணில் ஈடுபட்டுவருகிறார். இன்றுடன் நிறைவுக்கு வரும் வடக்குக்குக்கான அவரது நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ வருகையும்கூட இந்த நோக்கத்திற்கான தொன்றாகவே பார்க்கப்படுகிறது. அதே வேளை அவரின் தீவிர ஆதரவாளரும் பொதுஜன பெரமுன கட்சியின் கம்பஹா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான நிமல் லான்சா தலைமையிலான குழுவினர் ரணிலுக்கு ஆதரவாக அரசியல் தலைவர்களின் பரந்துபட்ட அணியொன்றினை உருவாக்கும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். அதன் ஒரு வெளிப்பாடாக புத்தாண்டின் முதல் நாளில் ராஜகிரியவில் அவ்வணிக்கான பணிமனையை முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுர பிரியதர்ஷன யாப்பா தலைமையில் திறந்து வைத்ததுடன் அங்கு தமது அணிக்கு வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்த எழுபது பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதாகவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். இவை ரணில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளதைக் கட்டியம் கூறி நிற்பதாகக் கொள்ள முடியும். அவ்வாறு போட்டியிடுவாராயின் இன்றைய நிலையில் அத்தேர்தலில் அவரது வெற்றி வாய்ப்பில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நேர் மற்றும் எதிர் மறைக் காரணிகள் எவையாக இருக்கக் கூடும்? தேர்தலுக்கு இன்னும் பல மாதங்கள் இருப்பதால் தற்போதைய அரசியல் காட்சிகளில் எதிர்காலத்தில் மாற்றங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பினும் அடிப்படையான காரணிகளில் அதிக மாற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே இருக்கும்.

இலங்கை அரசியலைப் பொறுத்து மூத்த அரசியல்வாதியான ரணிலின் பலமென்ன? பலவீனமென்ன? ரணில் இயல்பாகவே தோற்றம், சிந்தனை, செயற்பாடு போற்றவற்றில் பெருமளவுக்கு மேற்குலகக் கனவான் அல்லது மேட்டுக்குடி அரசியல் சாயல் கொண்ட ஒருவர். அவ்வப்போது சில புறநடைகளை வெளிப்படுத்தியிருந்தாலும்கூட இலங்கை மக்களின் அரசியலுக்கேற்ற ஜனரஞ்சகத் தலைவராக அவர் ஒரு போதும் கருதப்பட்டவரல்லர். ஒரு வகையில் ரணிலும் அரசியல் வாரிசாக வந்தவர்தான். 1977ஆம் ஆண்டில் 28 வயதில் அவரது மாமனார் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவால் அரசியலுக்குக் கொண்டுவரப்பட்டவர். பியகம தேர்தல் தொகுதியிலிருந்து முதன்முறையாகப் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட ரணிலுக்கு பிரதி வெளிவிவகார அமைச்சுப்பதவியும் பின்னர் கல்வி மற்றும் இளைஞர் விவகார வேலைவாய்ப்பு அமைச்சர் பதவியும் கொடுத்து முக்கியத்துவம் வழங்கப்பட்டது. இவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக நீண்டகாலம் இருந்தாலும் அக்கட்சியை வளர்ப்பதற்குப் பதிலாக டி.எஸ்.சேனநாயக்க தொடக்கம் ரணசிங்க பிரேமதாஸ வரையிலான தலைவர்களால் கட்டி வளர்க்கப்பட்ட கட்சியின் பலாபலன்களை அதிகம் அனுபவித்ததுடன் அக்கட்சியின் இன்றைய வீழ்ச்சிக்கும் காரணமான ஒருவர். ஏனைய கட்சித் தலைவர்களைப் போல அடிமட்டம் வரை இறங்கி கட்சித் தொண்டர்களுடனோ அன்றிப் பொது மக்களுடனோ பழகுவதற்கும், அரசியல் வேலைகளில் ஈடுபடுவதற்கும் அதிக ஆர்வம் காட்டாத ஒருவராக இருப்பது அவரின் மிகப்பெரிய பலவீனமாக உள்ளது. எனினும் சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்தும் அவரது சாணக்கியம் அவருக்குப் பலமாக உள்ளது. வாக்காளர் மூலம் தன்னைப் பலப்படுத்துவதைவிட எதிர்த்தரப்பைப் பலவீனப்படுத்துவதனூடாகத் தன்னைப் பலப்படுத்துவதில் அதிகம் ஆர்வம் காட்டும் ஒருவர். அதனால்தான் இன்றுவரை அவரால் அரசியலில் நிலைத்து நிற்க முடிவதுடன் பாராளுமன்ற உறுப்பினராகக்கூட மக்களால் தெரிவு செய்யப்படாத நிலையிலும் நிறைவேற்று ஜனாதிபதியாக வரமுடிந்தது. வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் இந்த உத்தியைத்தான் அவர் அதிகம் நம்பியிருப்பதை நிமல் லான்சா மூலமான முன்னெடுப்புகள் வெளிப்படுத்துகின்றன. ஏனெனில் அவரது ஐக்கிய தேசியக் கட்சி அவருக்குப் பெரிதாக உதவப் போவதில்லை என்பது அவருக்குத் தெரியும். ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி என்பன தங்களது ஜனாதிபதி வேட்பாளரை முன்மொழிந்து பரப்புரைகளைத் தொடங்கிவிட்ட போதிலும் ரணில் தனது முடிவை வெளிப்படையாக இன்னும் அறிவிக்காது இருப்பது ஒரு பலவீனமாக இருந்தாலும் ரணில் போட்டியிடுவாரா இல்லையா, தேர்தல் நடக்குமா இல்லையா, ஜனாதிபதித் தேர்தலா பாராளுமன்றத் தேர்தலா முதல் நடக்கும் என்ற குழப்ப நிலையை நீடிக்கச் செய்வதன் மூலம் எதிர்த்தரப்புகள் பலமடைவதைத் தடுத்து தன்னைப் பலப்படுத்தும் வழமையான உத்தியைக் கையாள்வதாகவும் அதைக் கருதமுடியும். அரசியல் தலைவர் என்ற வகையில் இவர்மீதான தனிப்பட்ட கறைகள் அரிதானவை. ரணில் மீதான பிரதான குற்றச்சாட்டுகளாக இருப்பவை ஒன்று பட்டலந்த சித்திரவதை முகாம் தொடர்பானது. மற்றது மத்திய வங்கி பிணைமுறி விற்பனை மோசடி தொடர்பானது. தமது சகாக்கள் செய்வதற்கு அனுமதித்தமை, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமை போன்றன ரணில் மீதான அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தாலும் தனிப்பட்ட ரீதியில் அண்மைக்காலத்தில் பதவியில் இருந்த பிரதமர் ஜனாதிபதிகளுடன் ஒப்பிடும்போது ரணில் Mr. Clean ஆகவே கருதப்படுகிறார்.

ரணிலின் இன்னொரு முக்கிய பண்பு அதீத பௌத்த மத வெளிப்பாடுகளைக் காட்டாதிருப்பதுடன் இனவாதக் கருத்துகளையும் தவிர்ப்பது. இதனால் அவரிடம் இனம், மதம் தொடர்பான மேலாதிக்கச் சிந்தனை இல்லை என்பது கருத்தன்று. ஏனைய சிங்களத் தலைவர்களுடன் ஒப்பிடுமிடத்து இவ்விடயங்களில் ரணில் மிதவாதப் போக்கினைக் கொண்டிருப்பதுடன் மற்றத் தலைவர்களைப் போலத் தனது அரசியலுக்காக இவ்விடயங்களைக் பொதுமக்கள் மத்தியில் விதைப்பதில்லை. இது அவருக்கு ஒருபுறத்தில் பலவீனமாகவும் மறுபுறத்தில் பலமாகவும் அமைகிறது. இதனால் மஹிந்த, கோதாபய போன்றோர்க்கு கிடைத்தது போன்று பௌத்த மதபீடங்களின் ஆசியும், சிங்கள கடும் போக்காளரது ஆதரவும் ரணிலுக்கு இல்லாதிருப்பது பலவீனமாகும். ஏனெனில் இலங்கையில் தேர்தல் அரசியல் என்பது பௌத்த சிங்களப் பேரினவாதத்தின்மீதே கட்டியெழுப்பப்பட்டதொன்று. மறுபுறத்தில் இது ஏனைய தேசிய இனங்களின் ஆதரவை ரணில் பெறுவதற்கான ஒரு பலமாக உள்ளது. சுதந்திரத்துக்குப் பின்னரான தேர்தல் வரலாற்றில் மலையகம் உட்பட தமிழ், முஸ்லிம் மக்களது ஆதரவு பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கானதாகவே இருந்து வந்துள்ளது. எதிர்காலத்திலும் இதற்கான வாய்ப்புகள் இல்லை என்று கூறமுடியாது.

இத்தேர்தலில் ரணிலுக்கு புறத்தே இருக்கக்கூடிய வாய்ப்புகள் எவை? போட்டியாளர்கள் என்றவகையில் ராஜபக்ஷக்களின் வீழ்ச்சி, சஜித் தரப்பில் காணப்படக்கூடிய பலவீனங்கள், நெருக்கமான போட்டியாளராக வர அனுரகுமார திசநாயக்க இன்னும் வளரவேண்டியிருத்தல் போன்றன ரணிலுக்கு வாய்ப்பான விடயங்கள். ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுன தனித்து களமிறங்குவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு. அவ்வப்போது தம்மிக பெரேரா போல சில சலசலப்புகள் காட்டப்பட்டாலும் ராஜபக்ஷக்களின் செல்வாக்கு வீழ்ச்சியடைந்தமை, அக்கட்சி உறுப்பினர்கள் சிதறிச் சென்றமை, அவர்களுள்ளும் கணிசமானோர் ரணிலுக்கு ஆதரவு தெரிவிப்பது, ஆளும் கட்சியாக இருந்தாலும் அதிகாரம் செலுத்த முடியாமை போன்ற காரணிகள் அதற்குத் தடையாக உள்ளன. பொது வேட்பாளர் என்ற கோதாவில் ரணில் களமிறங்கும்போது வெளியிலிருந்தான ஆதரவை ராஜபக்ஷ தரப்பு வழங்குவற்கான வாய்ப்பே அதிகமுள்ளது. இது ரணிலுக்கு ஒரு புறத்தில் வாய்ப்பையும் மறுபுறத்தில் சவாலையும் உருவாக்கும். பொதுஜன பெரமுனவுக்கு கிராம மட்டத்தில் கணிசமான வாக்கு வங்கி இன்றும் நிலையாக இருப்பதுடன் தேர்தலுக்காக வேலைசெய்யும் உத்திகளும் நிதிவளமும் அவர்களிடம் நிறையவே உண்டு. அவற்றை ரணிலுக்காகப் பயன்படுத்துவது தொடர்பான தயக்கம் இருந்தாலும் இது இன்னொரு கட்சிக்கானதாக இல்லாதிருப்பதுடன் பாராளுமன்றத் தேர்தல் மற்றும் கட்சியை மீளக்கட்டியெழுப்புதல் போன்றவற்றுக்கு வாய்ப்பாகப் பயன்படுத்த முயலுவார்கள் என்பதால் தேர்தலில் அக்கட்சியின் ஈடுபாடு இருக்குமென எதிர்பார்க்கலாம். இது ரணிலுக்குச் சாதகமாக அமைந்தாலும் ஏலவே நாட்டை இன்றைய நிலைக்குத் தள்ளிய ராஜபக்ஷ தரப்பை ரணில் பாதுகாத்து வருகிறார் என்று அதிருப்தி அடைந்திருக்கும் தரப்பை இன்னும் தூரச் செல்ல வழிவகுக்கும்.

முக்கிய எதிர்த்தரப்பான ஐக்கிய மக்கள் சக்தியில் காணப்படும் பலவீனங்கள் ரணிலுக்கான பலமாக அமையும். அக்கட்சியின் வேட்பாளர் சஜித் கூட பெரியளவில் மக்களை கவரக்கூடிய ஒரு ஜனரஞ்சகத் தலைவர் அல்லர். அத்துடன் அக்கட்சியைச்சேர்ந்த பலர் மட்டுமல்லாமல் கூட்டுச் சேர்ந்துள்ள சில தலைவர்களுங்கூட சஜித்தலைமையை விரும்பி ஏற்று இருப்பவர்கள் அல்லர். அவர்கள் தங்கள் அரசியல் எதிர்காலத்துக்கு வேறு தெரிவுகள் இன்மையால் ஒட்டிக்கொண்டிருப்பவர்கள். ஐக்கிய மக்கள் சக்தியிலுள்ள பெரும்பாலானவர்கள் முன்னைய ஐக்கிய தேசியக் கட்சியின் விசுவாசிகள் என்பதற்கப்பால் அவர்களில் பலர் இன்றுங்கூட ரணிலுடன் நெருக்கமாக இருப்பவர்கள். இயல்பாகவே சிங்களத் தலைவர்கள் பதவிகளுக்காக எவ்வித தயக்கமுமின்றி கட்சி தாவுபவர்கள். அதனை சிங்கள மக்களும் ஏற்கும் மனப்பாங்கு கொண்டவர்கள். இந்நிலையில் ரணிலுக்கான வெற்றி வாய்ப்பு சற்றுப் பிரகாசமானால் அவர்களில் பலர் ரணில் பக்கம் ஓடிவருவார்கள். ரணிலை தீவிரமாக எதிர்த்த ஹிருணிகா, சரத்பொன்சேகா, சம்பிக்க போன்றவர்கள் தற்போது அடக்கி வாசிக்கத் தொடங்கிவிட்டதையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

இப்போது சஜித்துடன் நிற்கும் தமிழ் முஸ்லிம் கட்சிகள் எப்போதும் அவருடன் உறுதியாக நிற்பார்கள் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. பெரும்பாலான மலையகத் தலைவர்கள் மற்றும் முஸலிம் தலைவர்கள் சந்தர்ப்பத்துக்கேற்ப சுருதியை மாற்றக் கூடியவர்கள். கோதாபாயவின் நெருங்கிய விசுவாசியான நாலக ஹேடகேவா ஐக்கிய மக்கள் சக்தி உள்வாங்கியமை மற்றும் விமல் வீரவன்ச, கம்பன்பொல போன்றோருடனான பேச்சுவார்த்தைகளால் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ள சிறுபான்மையினத் தலைவர்களிடையே அதிருப்தி வெளிப்படத் தொடங்கிவிட்டது. ஏலவே மலையகத்தில் கூடிய வாக்கு வங்கியைக் கொண்டுள்ள தொண்டமான் தரப்பும் வேறு சிலரும் ரணிலின் ஆதரவாளராக உள்ளனர். வடக்கு-கிழக்கு தமிழ்க்கடசிகளைப் பொறுத்த மட்டில் பிள்ளையான், டக்ளஸ் போன்றோர் ரணிலுக்கான ஆதரவை ஏலவே தெரிவித்து விட்டனர். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வழமை போல ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்கும் முடிவை அறிவித்து விட்டது. இப்போது பிரிந்து நிற்கும் முன்னைய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து சஜித்துடன் நிற்பார்களா என்பது கேள்விக்குறி. ரெலோ, புளட் உறுப்பினர்கள் இப்போதும் ரணிலுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருப்பவர்கள். பாராளுமன்றத்தில் ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பு, வன்னியில் கரும்புத் தோட்டம், தற்போது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலவருக்கான பரிசீலனை போன்றன அவரகளைப் பதம்பார்ப்பதற்கான சில பருக்கைகள். தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் ரணில் பக்கம் திரும்புவதற்கான வாய்ப்புகளே அதிகம். அதிலும் தமிழரசுக் கட்சியின் தலைவருக்கான தெரிவு இடம்பெற்று

(14ஆம் பக்கம் பார்க்க)

பனங்காட்டான்

# வடக்கிலிருந்து புறப்பட்டுள்ளது ரணிலின் ஜனாதிபதித் தேர்தல் 'ரயில்'!

இலங்கையில் தேர்தல் கால காய்ச்சல் ஆரம்பமாகிவிட்டது. அல்லது தேர்தல் காய்ச்சல் பரவத் தொடங்கி விட்டது என் னறும் சொல்லலாம்.

வழக்கமாக கண்டி தலதா மாளிகையில் ஆசி நூல் கட்டுவதுடன் அல்லது அநுராதபுரத்தில் வெள்ளரச மரத்தின் கீழ் வழிபாட்டுடன் இது தொடங்கும். ஆனால் இம்முறை ஏதோ ஒரு எதிர்பார்ப்புடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனை வடக்குக்கு கொண்டு சென்றுள்ளார்.

2024ம் ஆண்டு பிறந்து நான்காம் நாள் தமது ஜனாதிபதி தேர்தலுக்கான பயணத்தை வடக்கின் பொருளாதார அபிவிருத்திக்கான நிகழ்வுகள் என்ற பெயரில் கட்டியம் கூறி ஆரம்பித்து வைத்துள்ளார் இவர்.

தமிழர் பிரச்சினைகளுக்கு கடந்த வருட பெப்ரவரி மாத நான்காம் திகதிய இலங்கையின் 75வது சுதந்திர தினத்துக்கு முன்னர் தீர்வு காணப்படுமென ஒரு வருடத்துக்கு முன்னர் வழங்கிய உறுதிமொழிகளை காற்றில் பறக்க விட்டவர், இந்த வருட முதல் வாரத்தில் தமிழர் தாயகம் சென்று நிறைவேற்ற முடியாத தமது அடுத்த உறுதி மொழிகளை அங்கிருந்து வீசியுள்ளார்.

இவரது தாய் மாமனாரான றஞ்சித் விஜேவர்த்தனவின் பத்திரிகைகள் ரணிலின் புதிய உறுதிமொழிகளை வரிக்கு வரி பிரசுரித்து பிரபல்யப் படுத்தின. இதுவொன்றும் எதிர்பாராத அல்லது தற்செயலானவை அல்ல.

அடுத்த ஐந்து வருடங்களில் வடக்கில் முழுமையான அபிவிருத்தி என்று ரணில் கூறி வருவது, அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னரான ஆட்சிக் காலத்தை குறிப்பிடுகிறது என்பதைப் புரிந்து கொண்டால், வரப்போகின்ற ஜனாதிபதித் தேர்தலின் முடிவை இவர் தமக்குரியதாக கணித்துள்ளார் என்பதை அறிவதற்கு நேரம் எடுக்காது.

கடந்த வருடம் கோதபாயவினால் ஜனாதிபதியாக நியமனம் செய்யப்பட்டவர், பின்னர் நாடாளுமன்றத்தால் அந்தப் பதவியை ஊர்ஜிதம் செய்தவர், அன்றிலிருந்து இன்றுவரை பதின்மூன்றாம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவேன் என்று வாய்க்கு வாய் கூறி வருபவர், பதின்மூன்றாம் திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்கள் மாகாண மட்டத்தில் வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப போதுமானவையென்று வடக்கிலிருந்தவாறு கடந்த வாரம் கூறி அனைவருக்கும் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்துள்ளார்.



பதின்மூன்றாம் திருத்தத்தின் கீழ் வழங்கப்பட வேண்டிய காணி மற்றும் காவல்துறை அதிகாரங்கள் இதுவரை மத்திய அரசிடமே உள்ளன. மாகாணங்களைப் பொறுத்தளவில் இவை இரண்டும் ஏட்டுச் சுரைக்காய்கள். எக்காரணம் கொண்டும் இவ்விரு அதிகாரங்களும் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட மாட்டாது என்று இதுவரை ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசுகளும் ஏட்டிக்குப் போட்டியாகக் கூறி அதனை செயலிலும் நிரூபித்து வந்துள்ளன.

காணி அதிகாரத்தை வழங்க முடியும் ஆனால் கால்துறை அதிகாரம் கிடையாது என்று சில வாரங்களுக்கு முன்னர் தமிழர் பிரதிநிதிகளிடம் ரணில் தெரிவித் திருந்தார். ஆனால், சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை மீற முடியாத இவர் பின்னர் அமைதியாக அதனை மறந்தவராகி விட்டார்.

மாகாண பொருளாதார வளர்ச்சிக்கு பதின்மூன்றாம் திருத்தத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் போதுமானதென்று இப்போது இவர் கூறுவதானது, காணி மற்றும் காவல்துறை அதிகாரம் இல்லாமலே மாகாண பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியுமென்ற அவரது கொள்கை விளக்கமாக அமைந்துள்ளது. அப்படியெனில் இவ்விரு அதிகாரங்களும் மாகாண சபைகளுக்கு தேவையில்லை என்பதை முடிவாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென தமிழ் மக்களுக்கு அவர்கள் மண்ணிலிருந்து அவர் நேரடியாகக் கூறியதாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

தமிழர் பிரச்னைக்கு அரசியல் ரீதியான தீர்வை விரும்பாத இவர், பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதே தீர்வு என்பதை மறைமுகமாகவும் நேரடியாகவும் கூறியுள்ளார். இதனாற்தான் போலும், தமிழர் உரிமைகளை முன்னிறுத்தி அரசியல் செய்யும் தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்களும் பிரதிநிதிகளும் இவரது நிகழ்ச்சிகளில் பங்கேற்பதை தவிர்க்க நேர்ந்துள்ளது.

தமது வடபகுதி விஜயத்தின்போது இவர்களின் சமுகமின்மையை ரணில் பெரிதாகக் காட்டிக்கொள்ளவில்லை. வடக்கை அபிவிருத்தி செய்து பொருளாதார மீட்சி ஏற்படுத்த அனைவருக்கும் விடுத்த அழைப்பை தமிழ்த் தேசியவாதிகள் புறக்கணித்து விட்டனர் என்று ஜனாதிபதி தேர்தல் பரப்புரை காலத்தில் கூறுவதற்கு இது அவருக்கு ஒரு வாய்ப்பாகவும் அமையக்கூடும்.

இதற்கு முன்னோட்டமாகவே வடக்கு மாகாணத்தை தனித்துவமான பொருளாதார மையமாக கட்டியெழுப்ப முடியுமென்றும், வடக்கை புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மையமாக்க முடியுமென்றும் அறைகூவியுள்ள ரணில், இதற்குத் தேவையான அனைத்து வளங்களும் இங்கு உள்ளனவென்றும் தெரிவித்து அதற்குப் போதுமான அதிகாரப் பகிர்வு, ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாகக் கூறியிருக்கும் அப்பட்டமான பொய்யை எவ்வகையிலும் ஜீரணிக்க முடியாது.

அதிகாரப் பகிர்வு வழங்க வேண்டியதை அடிப்படையாகக் கொண்டு நல்லாட்சிக் காலத்தில் தாம் பிரதமராக இருந்தபோது மேற்கொள்ளப்பட்ட புதிய அரசியலமைப்பு வரைபுக்கு என்ன நிகழ்ந்தது என்பதை இவரைத் தவிர எவராலும் கூற முடியாது.

இனி வரப்போகும் புதிய அரசாட்சி அமைப்பில் அதிகாரப் பகிர்வை உள்ளடக்கிய விடயங்களுக்கு தீர்வு காணப்படுமென அண்மையில் தமிழர் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சிறப்புச் சந்திப்பில் எடுத்துக் கூறியவரும் இவரே.

இதனை மறந்து, போதுமான அதிகாரப் பகிர்வு ஏற்கனவே இடம்பெற்றுள்ளது என்று இப்போது கூறியுள்ளாரென்றால், அதிகாரப் பகிர்வு என்பது இனிமேல் இடம்பெறப் போவதில்லையென்றே அர்த்தம் கொள்ள வேண்டியுள்ளது.

இவரது உரையின் இன்னொரு பகுதி ஆழமான புரிதலுக்கானது. அந்தப் பகுதி பின்வருமாறு: "நாம் ஜப்பான் தொடர்பில் கவனம் செலுத்தினால், ஜப்பான் சமஷ்டி ஆட்சியுள்ள ஒரு நாடு அல்ல. ஆனால் அதன் அனைத்து மாகாணங்களும் அபிவிருத்தி அடைந்துள்ளன. கொரியா, ஐக்கிய இராச்சியம், ஸ்கொட்லாந்து ஆகிய நாடுகளும் அந்த வளர்ச்சியை எட்டியுள்ளன. அப்படியானால் ஏன் ஒரு நாடாக எமக்குரிய பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது?" என்று கேள்வி எழுப்பியுள்ளார் ரணில்.

இந்தச் சொல்லாட்சி வழியாக சமஷ்டி முறையிலான தீர்வைக் கோரும் தமிழர் தரப்புக்கு அவர் கூறியிருக்கும் பதில், அது கிடையாது என்பது. அதாவது, கனடாவையும், சுவிற்சர்லாந்தையும் (சமஷ்டி ஆட்சி நாடுகள்) உதாரணத்துக்கு கொண்டு வராதீர்கள், ஒரே நாடாக வளர்ச்சியடைந்த ஜப்பான் போன்ற நாடுகளைப் பாருங்கள் என்பது தான்.

மாகாண சபை நிர்வாகத்தையே இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழான 13ம் திருத்தம் உள்ளடக்கியது. இதற்கு காணி மற்றும் காவல்துறை அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென இது தெரிவிக்கிறது. இவை இரண்டுமே இல்லாத மாகாண நிர்வாகம் இன்று மக்களால் தெரிவானவர்களது கைகளில் இல்லை. அரசாங்கத்தின் ஏஜன்டுகளாக இயங்கும் ஆளுனர்களே இதனைப் பரிபாலிக்கின்றனர்.

நடைமுறையில் இல்லாத அதிகாரப் பகிர்வு ஏற்கனவே இடம்பெற்றுள்ளது என்று பொய்யுரைக்கும் ஜனாதிபதி ரணில், சமஷ்டி முறைத் தீர்வு சாத்தியப்படாது என்றும் வரையறுத்துள்ளார். சிங்களத் தரப்புக்கு மகிழ்வூட்டும் கருத்துகளை தமிழர் தாயகத்தில் நின்றவாறு கூறி பௌத்த மேலாதிக்கத்தின் வாக்குகளை கொள்முதல் செய்யும் நோக்கத்துடனேயே தமது தேர்தல் பரப்புரையை இவர் ஆரம்பித்துள்ளார் போலத் தெரிகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் ஏற்கனவே ஒரு தடவை சூடு கண்ட இந்தப் பூனை அடுத்த இரண்டு தடவைகள் அந்த அடுப்புக்கு முன்னால் செல்லாது தவிர்த்துக் கொண்டது. கடந்த வருடம் அறகலய கோதபாயவுக்கு வழங்கிய தண்டனையால் கிடைத்த வாய்ப்பு ரணிலுக்கான ஜனாதிபதிப் பதவி. அந்தக் கதிரையை அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு தம் வசமாக்க ரணில் திட்டமிடுவது புரிகிறது.

வடக்கிலிருந்து புறப்பட்டிருக்கும் ரணிலின் ஜனாதிபதித் தேர்தல் ரயில், கிழக்கு - மேற்கு என்று ஓடி தெற்கை அடைவதற்கு முன்னர், தமிழர் தாயகம் தனது மௌனத்தைக் கலைத்து தமிழரின் அரசியல் அடையாளத்தை பலப்படுத்தி வலுப்படுத்த வேண்டும். இது சிங்கள மேலாண்மையைப் பலவீனப்படுத்துவதாக இருக்க வேண்டியது காலத்தின் அவசியம்.

> **13ஆம் திருத்தத்தின் கீழ் அதிகாரப் பகிர்வு ஏற்கனவே இடம்பெற்றுள்ளது என்றும், மாகாண மட்ட பொருளாதார கட்டுமானத்துக்கு இது போதுமானது என்றும் வடக்கில் நின்று பொய்யுரைத்துள்ள ரணில், ஜப்பானின் வளர்ச்சியை சமஷ்டிக்கு எதிரானதாக உதாரணம் காட்டியிருப்பது தமிழரின் தலையில் மீண்டும் எண்ணெய் தடவும் முயற்சிகள் ஆகும்.**



# ஈழத்தமிழர்கள் மீது தமிழகத்தவர்கள் கொண்டிருக்கக்கூடிய தப்பபிப்பிராயங்களை நீக்கிய கில்மிஷா!




**அனந்த பாலகிட்ணர்**

எண்பதுகளின் ஆரம்பத்தில் 1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தையடுத்து இலங்கையின் வடக்கு-கிழக்கு தமிழர்கள் இந்தியாவின் தமிழகத்தில் அகதிகளாக பாக்கு நீரிணையைக்கடந்து சென்று தஞ்சமடைந்தனர். ஆயிரக்கணக்கில் இராமேஸ்வரம் - தனுஷ்கோடி கரைகளில் கரைதட்டிய வடக்கு, கிழக்கு தமிழர்கள் அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டு அத்தியாவசிய தேவைகள் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் பாதுகாக்கப்பட்டனர்.

அப்பாவித்தமிழர்களுக்கு தமிழக அகதி முகாம்களில் தஞ்சமளிக்கப்பட்ட அதேசமயம் தீவிரவாத இளைஞர்களுக்கு வேதாரணியம் மற்றும் உத்தரப்பிரதேசம் ஆகிய இடங்களில் ஆயுதப்பயிற்சி பெறவும் இந்தியா இடமளித்திருந்தது.

இலங்கையின் வடக்கு, கிழக்கு தமிழர்கள் குறிப்பாக யாழ்ப்பாணத்தவர்கள் 83ஆம் ஆண்டின் பின்னர் 2009ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கு யுத்தம் முடிவுக்கு வரும்வரை சந்தித்த அவலங்கள் எண்ணிலடங்காதவை. இருந்தபோதிலும் இந்தியாவே எமது ஆபத்பாந்தவன் என்ற மனோநிலையிலேயே வடக்கு, கிழக்கு தமிழர்கள் இருந்து வந்தனர்.



இந்தியாவை நம்பியிருந்த வடக்கு, கிழக்கு தமிழர்களுக்கு இந்திய -இலங்கை ஒப்பந்தத்தை அமுல்படுத்தவும் அதனூடாக இலங்கை அரசியலமைப்பில் 13ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றி வடக்கு-கிழக்கு தமிழர்களின் அரசியலபிலாஷைகளை பூர்த்தி செய்யவும் இந்தியா முன்வந்தது. ஆனால் இந்தியா இலங்கை தமிழர்கள் மீது கொண்டிருந்த அனுதாபத்துக்காக கொடுத்த விலை மிக அதிகமானதாகும். 'வளர்த்த கடா' மார்பில் பாய்ந்தது போல வடக்கு-கிழக்கு தமிழர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வந்த இந்திய இராணுவத்தோடு முட்டி மோதியமை ஒரு புறமிருக்க அன்று வடக்கு-கிழக்கு தமிழர்களின் நலனையே பெரிதும் முதன்மைப்படுத்தி இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை கொண்டு வந்த அன்றைய இந்திய பிரதமர் ரஜீவ் காந்தி தமிழகத்தில் படுகொலை செய்யப்படுமளவுக்கு நிலைமை மோசமடைந்திருந்தது.

ஆனால் இன்று வடக்கு,கிழக்கு தமிழர்களின் அரசியல் விடிவுக்கு அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டமே உகந்ததாக இருக்க முடியும் என்பதே முடிந்த முடிவாக இருக்கின்ற நிலையில் இந்தியாவின் தமிழக மாநிலத்தில் தமிழகத்தவர்களே குறிப்பாக தமிழக இசைக்கலைஞர்களே வியந்து போற்றும் வகையில் யாழ்ப்பாணச்சிறுமி கில்மிஷா ஒரு சாதனையாளராக பரிணமித்துள்ளார்.

தமிழக தொலைக்காட்சி ஒன்றின் பாடல் நிகழ்ச்சியின் ஆரம்பம் முதல் கில்மிஷா வெற்றியாளராக அறிவிக்கப்படும் வரை அவரது பாடல்களை மிக நல்ல முறையில் வியப்போடு நடுவர்களாக வந்திருந்த பிரபல இந்திய பின்னணி பாடகர்கள் ரசித்ததை காண முடிந்தது.

தமக்கு கிடைத்த வெற்றியின் மூலம் தகுந்த வாய்ப்புகள் கிடைக்கும் பட்சத்தில் யாழ்ப்பாணத்தவர்கள் சாதனைகளைப்படைப்பதில் முன்னிற்பார்கள் என்பதை கில்மிஷா சந்தேகத்துக்கிடமின்றி நிரூபித்துள்ளார்.

இதற்கு மேலாக கடந்த நான்கு தசாப்த காலமாக இலங்கையின் வடக்கு-கிழக்கு மக்கள் குறிப்பாக யாழ்ப்பாணத்தவர்கள் மீது இந்தியாவின் தமிழக மக்கள் கொண்டிருக்கக் கூடிய தப்பபிப்பிராயங்களையும் தமது வெற்றியின் மூலம் கில்மிஷா அகற்றியுள்ளார்.

எண்பதுகளின் ஆரம்பத்தில் தமிழ்நாட்டில் வடக்கு, கிழக்கு தமிழர்கள் மீதான அனுதாபம் எல்லை கடந்திருந்தது. அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட விதத்தில் சகல தமிழக அரசியல்வாதிகளும் மற்றும் அவர்கள் கொண்டிருந்த அரசியல் செல்வாக்கு காரணமாக இந்திய மத்திய அரசினரும் கொண்டிருந்த ஈழத்தமிழர் மீதான அனுதாபம் 1987-ம் ஆண்டின் பின்னர் விரைந்து மாற்றம் காணத்தொடங்கியது.

அகதிகளாகவும் நாதியற்றவகைளாகவும் பார்க்கப்பட்ட வடக்கு - கிழக்கு தமிழர்கள் 1991ஆம் ஆண்டு முன்னாள் இந்திய பிரதமர் ரஜீவ் காந்தியின் படுகொலையையடுத்து பயங்கரவாதிகளாக பார்க்கப்படும் நிலை உருவாகியிருந்தது.

வடக்கு - கிழக்கு தமிழர்கள் தென்னிலங்கையில் சந்தேகக்கண்கொண்டு பார்க்கப்பட்டது போலவே தமிழகத்திலும் பார்க்கப்பட்டனர். இலங்கைத்தமிழ் தீவிரவாதிகள் என்று சந்தேகிக்கப்பட்டோர் தமிழகத்தில் சல்லடைபோட்டுத் தேடப்பட்டு கைது செய்யப்பட்டனர். இதன்காரணமாக அப்பாவி இலங்கைத் தமிழ் அகதிகள் மற்றும் தமிழகத்தில் உயர்கல்வி வாய்ப்புகளைப்பெற்ற இலங்கைத்தமிழர்கள், இந்தியாவுக்கு பயணித்த இலங்கைத்தமிழர்கள் ஆகியோர் பெரும் சிரமங்களை அனுபவித்தனர்.

தமிழகத்தில் இன்று வரை ஈழத்தமிழர்கள் மீதான தப்பபிப்பிராயங்கள் முற்று முழுதாக நீங்கிவிட்டதெனக் கூறுவதற்கில்லை. ஆயினும் அகதிகளாகவும், இடம்பெயர்ந்தோராகவும் தஞ்சங்கோருவோராகவும் இருக்க வேண்டியவரகளல்ல வடக்கு, கிழக்கு தமிழர்கள். காலவோட்டம் இலங்கையின் அசாதாரண அரசியல் மற்றும் பாதுகாப்பு நிலவரங்கள் என்பவையே அவர்களை நிர்க்கதியான சூழல்களுக்கு முகங்கொடுக்க வைத்திருந்தது. அவர்கள் அத்தகைய சூழ்நிலைகளிலிருந்து மாற்றங்கண்டு தமது அறிவார்ந்த பழைய நிலைக்கு திரும்பிக்கொண்டிருக்கின்றார்கள் என்பதையே கில்மிஷாவின் வெற்றி எடுத்துரைக்கின்றது.

இந்தியாவுடனான உறவில் தமிழகத்தவர்களுக்கும் இலங்கையின் வடக்கு, கிழக்கு தமிழர்களுக்குமிடையிலான உறவு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

இதேவேளை கில்மிஷா தமது தமிழக வெற்றியின் பின்னர் தாய்நாடு திரும்பிய பலாலி யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் குழப்பகரமான காலகட்டங்களுக்கு முன்னர் தமிழக கலைஞர்கள் பலர் இலங்கை வருவதற்கு வழியமைத்திருந்தது. அக்கலைஞர்களில் கர்நாடக சங்கீத கலைஞர்கள், திரையுலக கலைஞர்கள், மற்றும் தமிழக தமிழறிஞர்கள் ஆகியோர் முக்கியமானவர்கள். ஆலய திருவிழாக்கள், இசைக்கச்சேரிகள் என்பவற்றுக்கெல்லாம் தமிழகத்திலிருந்து இசைக்கலைஞர்கள் மட்டுமல்ல. திரையுலகத்தினரும் நிகழ்ச்சிகளை நடத்த யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தனர். இதுதவிர தமிழகத்தில் இடம்பெறும் பலதரப்பட்ட நிகழ்வு களுக்காகவும் ஆன்மீக தல யாத்திரைகளுக்காகவும் யாழ்பபாணத்திலிருந்து கூட பலர் தமிழகம் செல்வதுண்டு.

ஆயினும் பலாலியிலுள்ள சர்வதேச விமான நிலையம் துரதிர்ஷ்ட வசமாக ஏறத்தாள நான்கு தசாப்தகாலம் வடக்கு, கிழக்கு யுத்தம் காரணமாக இராணுவ தேவைகளுக்காகவே பெரிதும் பயன்படுத்தப்பட்டு வந்தது.

ஆயினும் தற்போது பலாலி சர்வதேச விமான நிலையம் மீளவும் அதன் முக்கியத்து வத்தை பெற ஆரம்பித்ததையே கில்மிஷாவின் தமிழக பயணம் மற்றும் அண்மையில் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பலாலி ஊடாக தாயகம் திரும்பியமை போன்ற நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

பலாலி விமான நிலையம் யாழ்ப்பாண புகையிரத நிலையம் என்பவையே அந்தகாரச் சூழல் வடபகுதியை ஆக்கிரமிக்க முன்னர் தென்னிலங்கை அரசியல் பிரமுகர்கள் யாழ்ப்பாணம் வந்திறங்கும் இடங்களாக இருந்தன.

கில்மிஷாவுக்கு யாழ்ப்பாணம் பலாலி சர்வதேச விமான நிலையத்திலிருந்து அவரது பிறப்பிடமான அரியாலைப் பிரதேசம் வரை மகத்தான வரவேற்பு வீதி நெடுகிலும் வழங்கப்பட்டிருந்தது.

ஏறத்தாள இதையொத்த பெரு வரவேற்பே இலங்கையின் முன்னாள் பிரதமரும் உலகின் முதல் பெண் பிரதமருமான சிறிமாவோ பண்டார நாயக்கா 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை அங்குரார்ப்பணஞ் செய்து வைப்பதற்காக விமான முலம் வந்திருந்தபோது பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் வரை அவருக்கு மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது. சிறிமாவோ அவரது காரில் பின்புற ஆசனத்தில் அமர்ந்து வந்த போது அவர் அருகே அன்றைய யாழ்ப்பாண மேயராக இருந்த அல்பிரட் துரையப்பாவும் அவ்வாகனத்தில் அமர்ந்து வந்தார். பலாலி விமான நிலைய சூழலிலிருந்து சிறிமாவோ பண்டாரநாயக்க யாழ்ப்பாணம் வந்த போது அவரை வீதியின் இருமருங்கிலும் திரண்டு நின்று மக்கள் வரவேற்றனர்.

எனவே யாழ்ப்பாணத்தின் பலாலி வீதி, கங்கேசன் துறை வீதி என்பவை பிரமுகர்களின் வருகைக்கும் வரவேற்புகளுக்கும் பிரபலமானவையாகவே இருந்தன. இதுதவிர 1974-ம் ஆண்டு நான்காவது அனைத்துலக தமிழாரய்சி மகாநாடு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற போது தமிழர்களது வரலாற்றுப்பெருமைகளை எடுத்தியம்பும் ஏராளமான ஊர்திகள் பயணித்தது கூட காங்கேசன் துறை வீதியூடாக என்பது குறிப்பிடத்தக்கது.

சாதனைப் பாடகி கில்மிஷாவை முத்துச்சப்பரத்தினால் அலங்கரிக்கப்பட்ட வாகனத்திலும் அமரச்செய்து அவரது அபிமானிகள் கொண்டு சென்றனர். இத்தகைய முத்துச்சப்பரங்களில் அமர வைத்து ஊர்வலங்களில் எண்பதுகளிற்கு முன்னர் பிரபலமானவர்கள் அழைத்துச் செல்லப்பட்டதையே கில்மிஷாவின் ஊர்வலம் நினைவூட்டியது.

அறுபதுகளின் நடுப்பகுதியில் அன்றைய பிரதமராக இருந்த டட்லி சேனநாயக்காவும் காங்கேசன் துறை வீதியில் கொக்குவில் பகுதியிலிருந்து ஒரு முத்துச்சப்பர வாகனத்திலேயே யாழ்ப்பாண முத்துவெளிப்பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தார்.

கில்மிஷாவின் நிகழ்ச்சி வெற்றி என்பது தமிழகத்தவர்களுக்கு மட்டுமல்ல. யாழ்பாணத்தவர்களுக்கும் குறிப்பாக இலங்கையர்கள் அனைவருக்குமே வழங்கியுள்ள செய்தியென்னவெனில் கடந்த நான்கு தசாப்தகால யுத்தம் ஏற்படுத்திய தாக்கங்களால் யாழ்ப்பாண மக்கள் துவண்டு விடவில்லை என்பதாகும்.

யாழ்ப்பாணம் என்ற பெயர் யாழிசைக்கருவியிலிருந்தே உருவாகியதென்பதோடு அதனை மீட்டிப்பாடிய பாணன் என்ற கலைஞரது பெயருடன் இணைந்தே அப்பெயர் முழுமை பெற்றதென்பதே வரலாறாகவுமிருக்கின்றது.

எனவே யாழ்ப்பாணம் என்பது ஓர் இசை வடிவமான பூமியாகும். வடக்கு, கிழக்கில் நிலவிய அந்தகாரச் சூழல்களுக்கு முற்பட்ட காலத்தில் யாழ்ப்பாணத்திற்கு பிரபல இந்தியாவின் சங்கீத, மெல்லிசை கலைஞர்கள் பலரும் பயணஞ் செய்து நிகழ்ச்சிகளை வழங்கியிருந்தனர்.

இசையரசி எம்.எஸ்.சுப்புலக்ஷ்மி , சீர்காழி கோவிந்தராஜன், டி.எம். சௌந்தரராஜன், கே.ஜே.ஜேசுதாஸ்

(14ஆம் பக்கம் பார்க்க)

# நரகத்தில் ஓர் இடைவேளைக்கு பிறகு...!



வீரகத்தி தனபாலசிங்கம்




மக்கள் கிளர்ச்சிக்கு வழிவகுத்த பொருளாதார நெருக்கடியின் போது கடுமையான பொருட்கள் தட்டுப்பாட்டுக்கும் மக்களை இரவுபகலாக எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் மைல் கணக்கில் வரிசைகளில் காத்துநிற்கவைத்த எரிபொருட்கள் தட்டுப்பாட்டுக்கும் பிறகு கடந்த வருடம் பெரும்பாலான மக்களினால் வாங்கமுடியாத விலைகளில் இருந்தாலும் பொருட்களைப் பெறக்கூடியாக இருந்த காலப் பகுதியை கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று அதன் ஆசிரிய தலையங்கத்தில் 'நரகத்தில் இடைவேளை' (Interval in the Hell) என்று வர்ணித்திருந்தது.

தற்போது புதுவருடம் பிறந்த நிலையில் வரி அதிகரிப்புகளின் விளைவாக பொருட்களின் விலைகளும் சேவைகளின் கட்டணங்களும் மக்களினால் தாக்குப் பிடிக்கமுடியாத அளவுக்கு உயர்ந்து கொண்டிருப்பதை பார்க்கும் போது அந்த வர்ணனை எவ்வளவு கச்சிதமானது என்பதைப் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது.

பெறுமதிசேர் வரியை (வற்) அரசாங்கம் 15 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக அதிகரித்ததுடன் ஏற்கெனவே விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்த பெருவாரியான பொருட்களும் அந்த வரி விதிப்பு வீச்சுக்குள் கொண்டுவரப்பட்டதை அடுத்து (ஏற்கெனவே வாழ்க்கைச் செலவைச் சமாளிப்பதற்கு பல்வேறு சிக்கன உபாயங்களை கடைப்பிடித்து வந்த) பெரும்பாலான மக்கள் என்ன செய்வது என்று தெரியாமல் திணறிக் கொண்டிருக்கிறார்கள்.

செலவினங்களைக் குறைத்து அரச வருவாயை அதிகரிப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் விதித்திருக்கும் நிபந்தனைகளை அரசாங்கம் மக்களுக்கு நேரக்கூடிய இடர்பாடுகளைப் பற்ற சிந்திக்காமல் நடைமுறைப்படுத்துவதே இதற்கு காரணமாகும்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியைத் தொடர்ந்து பெறுவதற்கு அதன் நிபந்தனைகளை நிறைவேற்றுவதை தவிர வேறு வழியில்லை. பிச்சைக்காரர்களுக்கு தெரிவு இல்லை.

இந்த வருடம் தேர்தல் ஆண்டாக இருந்தாலும் கூட முன்னரைப் போன்று அரசியல் கட்சிகளிடம் இருந்து இனிப்பான பொருளாதார நிவாரண உறுதிமொழிகளைப் பெரிதாக எதிர்பார்க்கவும் முடியாது. ஏனென்றால் முக்கியமான எதிரணி கட்சிகளும் கூட ஆட்சிக்கு வந்தால் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒத்துழைத்துச் செயற்படப் போவதாகவே கூறுகின்றன.




நிபந்தனைகளை குறித்து நாணய நிதியத்துடன் மீள் பேச்சுவார்த்தைகளை நடத்தப்போவதாக அந்த கட்சிகள் கூறினாலும் அது எந்தளவுக்கு சாத்தியமாகும் என்ற கேள்வி இருக்கிறது.

எதிர்காலத்தில் பதவிக்கு வரக்கூடிய எந்த அரசாங்கமும் சர்வதேச நாணய நிதியத்துடனான உதவித்திட்டத்தை மீள் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தமுடியும். ஆனால் சர்வதேச ஆதரவைப் பெறுவதற்கு தற்போது முன்னைடுக்கப்படும் பாதையையே தொடர்ந்து பின்பற்ற வேண்டியிருக்கும் என்று சில தினங்களுக்கு முன்னர் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க செய்தியாளர்கள் மகாநாட்டில் கூறினார்.

"தற்போது தெரிவு செய்யப்பட்டிருக்கும் பாதையில் இருந்து விலகினால் சர்வதேச ஆதரவு கிடைக்காமல் போகும். சர்வதேச நாணய நிதியத்தின் உதவித்திட்டம் கடந்த வருடம் செப்டெம்பர் முதலாம் திகதி தொடங்கியது. கடனுதவியின் முதலாவது தவணைக் கொடுப்பனவு வழங்கப்பட்ட பிறகு அடுத்த தவணைக் கொடுப்பனவுக்கு முன்னதாக எமது கடப்பாடுகள் குறித்து மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இது அடுத்த நான்கு வருடங்களுக்கு எந்த அரசாங்கம் பதவியில் இருந்தாலும், காலப் பொருத்தமான முறையில் கொள்கைகளில் மாற்றத்தைச் செய்வதற்கு மீண்டும் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தவேண்டிய ஒரு தொடர்ச்சியான செயன்முறையாகும்.

"பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு எந்த கட்டுப்பாடுகளும் இல்லை. ஆனால் சர்வதேச ஆதரவைப் பெறுவதற்கு இதே திட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டியது அவசியம். அந்த விளக்கப்பாட்டின் அடிப்படையில்தான் வெளிநாடுகளின் அரசாங்கங்களும் ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்களும் கடன் நிவாரணத்துக்கு இணங்கியிருக்கின்றன. இதே கடன் மறுசீரமைப்பு பாதையில் அடுத்த பத்து வருடங்களுக்கு பயணம் செய்ய வேண்டிய தேவை இருக்கிறது.

"இதில் மாற்றத்தைச் செய்தால் அவர் களும் கடன் நிவாரணம் தொடர்பான தீர்மானத்தை மாற்றிவிடலாம். அதனால் தற்போதைய பாதையில் இருந்து விலகினால் தங்களால் தொடர்ந்து ஆதரவை வழங்கமுடியாது என்று அவர்களால் கூறமுடியும். அதற்கு பிறகு வருடாந்தம் நாம் 600 கோடி அமெரிக்க டொலர்கள் கடனைத் திருப்பிச்செலுத்தவேண்டியிருக்கும் " என்று அவர் கூறினார்.

இலங்கை அகப்பட்டிருக்கும் சிக்கலின் பாரதூரத்தன்மையை கலாநிதி வீரசிங்கவின் விளக்கம் தெளிவாக உணர்த்துகிறது.

புதிய வருடத்தில் கடுமையான இடர்பாடுகளை எதிர்நோக்கவேண்டியிருக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வருடத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் கூறியிருந்தார். பொருளாதார நிலைவரம் தொடர்பில் மக்களுக்கு பொய் கூறவிரும்பவில்லை என்றும் மக்களால் விரும்பப்படாத தீர்மானங்களை எடுப்பதற்கு தயங்கப்போதில்லை என்றும் கூறுவதன் மூலமாக அவர் தன்னை ஒளிவுமறைவற்ற தலைவராக காட்டிக்கொள்ளலாம்.

ஆனால், வங்குரோத்து நிலையில் இருந்து மீள்வதற்கு முன்னடுக்கப்படும் பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் விளைவான சுமையை சாதாரண மக்களினால் எவ்வளவு காலத்துக்கு தாங்கிக் கொள்ளமுடியும்? அந்த சுமை சமுதாயத்தின் சகல பிரிவுகள் மீதும் ஒப்புரவான ஒரு முறையில் பகிரப்படுவதாகவும் இல்லை. மறைமுகமான வரிகளின் விளைவான சுமை சாதாரண மக்களையே கடுமையாக அழுத்துகிறது.

## நிலைவர அறிக்கை

இத்தகைய பின்புலத்தில், குடிசன மதிப்பு, புள்ளி விபரவியல் திணைக்களம் கடந்தவாரம் வெளியிட்ட அறிக்கையை நோக்குவது அவசியமானதாகும். நாட்டின் தற்போதைய நிலைவரம் மாத்திரமல்ல எதிர்கால நிலைவரமும் கூட இருள் கவிந்ததாகவே இருக்கப்போகிறது என்பதை அறிக்கை தெளிவாகப் புரிந்துகொள்ளவைக்கிறது.

கடந்த வருடத்தின் முதல் காலாண்டில் 4.70 சதவீதமாக இருந்த வேலையில்லாத் திண்டாட்டம் இரண்டாவது காலாண்டில் 5.20 சதவீதமாக அதிகரித்தது. இன்று ஒரு குடும்பத்தின் அடிப்படை மாதாந்த வேதனம் 40 ஆயிரம் ரூபாவுக்கும் 50 ஆயிரம் ரூபாவுக்கும் இடைப்பட்டதாக இருக்கிறது. அது வெறுமனே உணவுத் தேவைக்கு மாத்திரமே போதுமானது. பிள்ளைகளின் கல்வி, உடை, மருத்துவ பராமரிப்பு, பயணங்கள் மற்றும் பொழுதுபோக்கு செலவினங்களுக்கு புறம்பாக பணம் தேவை.

தாய், தந்தையையும் இரு பிள்ளைகளையும் கொண்ட ஒரு குடும்பத்தின் உணவுச் செலவுக்கு சுமார் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபா தேவைப்படுகிறது.

60.5 சதவீதமான குடும்பங்களின் மாதாந்த சராசரி வருமானம் கடுமையாகக் குறைந்துவிட்டது. அதேவேளை, 91 சதவீதமான குடும்பங்களின் மாதாந்த செலவின மட்டம் கடுமையாக உயர்ந்துவிட்டது. பொருளாதார நெருக்கடியின் காரணமாக 22 சதவீதமான குடும்பங்கள் வங்கிகளிடம் அல்லது தனியாரிடம் கடன் வாங்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டன.

75.2 சதவீதமான குடும்பங்களின் உணவு முறையில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. 97.2 சதவீதமான குடும்பங்கள் செலவினங்களைச் சமாளிக்க பல்வேறு உபாயங்களைக் கடைப்பிடிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. அதேவேளை 46.4 சதவீதமான குடும்பங்கள் சேமிப்பைக் குறைத்திருக்கின்றன அல்லது சேமிப்புக்களை அன்றாட தேவைக்கு செலவு செய்கின்றன.

2019 ஆம் ஆண்டுக்கு பிறகு வறியவர்களின் தொகை சுமார் 40 இலட்சத்தில் இருந்து 70 இலட்சமாக அதிகரித்திருக்கிறது. சனத்தொகையில் 31 சதவீதத்தினர் வறுமைக்கோட்டின் கீழ் இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

கொழுப்பில் இயங்கும் "லேர்ண் ஏசியா" என்ற சிந்தனைக்குழாம் கடந்த வருடம் மேற்கொண்ட ஆய்வொன்றின் மூலம் சனத்தொகையில் மூன்றில் ஒரு பிரிவினர் அல்லது 33 சதவீதமானோர் தினம் ஒருவேளை உணவைத் தவிர்ப்பதாகவும் 47 சதவீதமானவர்கள் உணவின் அளவுகளைக் குறைத்திருக்கும் அதேவேளை வயது வந்தவர்களில் 27 சதவீதமானவர்கள் பிள்ளைகளுக்கு தேவை என்பதற்காக தங்களது உணவை கணிசமாகக் கட்டுப்படுத்திக்கொள்வதாகவும் கண்டறியப் பட்டிருக்கிறது.

குறைந்த வருமானம் காரணமாக போதுமான உணவுப் பொருட்களைப் பெறமுடியாததால் முகங்கொடுக்கவேண்டியிருக்கின்ற சவால்களை சமாளிக்க பல குடும்பங்கள் உணவைக் குறைத்திருப்பது மாத்திரமல்ல, வழக்கமாக சாப்பிடுகின்ற உணவு வகைகளைக் கைவிட்டு மலிவான வேறு வகை உணவுகளை நாடியிருப்பதாக சில சிவில் சமூக அமைப்புக்கள் மேற்கொண்ட ஆய்வுகள் கூறுகின்றன.

வழமையான உணவு வகைகளை வாங்குவது கட்டுப்படியாகாது என்பதால் குடும்பங்கள் கிரமமான உணவுகளைத் தவிர்ப்பதாகவும் தங்களது அடுத்த வேளை உணவு எங்கிருந்து வரும் என்பது தெரியாத நிலையில் சிறுவர்கள் வெறுவயிற்றுடன் படுக்கைக்கு செல்கிறார்கள் என்றும் யூனிசெவ் அமைப்பின் தெற்காசிய பிராந்தியப் பணிப்பாளர் ஜோர்ஜ் லாறியீ அட்ஜே 2022 ஆகஸ்டில் அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

சிறுவர்கள் மத்தியிலான மந்த போசாக்கைப் பொறுத்தவரை தெற்காசியாவில் ஆப்கானிஸ்தானுக்கு அடுத்ததாக இலங்கை இரண்டாவது இடத்தில் இருக்கிறது என்றும் அறிக்கைகள் கூறின.

இது இவ்வாறிருக்க, இவ்வருடத்தின் முதல் காலாண்டின் இறுதியில் மக்களின் வாழ்க்கைச் செலவுச் சுமையில் 75 சதவீதம் குறைவடை யக்கூடியதாக அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ கடந்த வாரம் கூறியிருக்கிறார். அரசியல்வாதிகள் உறுதி மொழிகளை அளிப்பார்கள். பிறகு அவற்றை நிறைவேற்றமுடியாமல் போய்விட்டால் அதற்கும் காரணங்களை தயாராகவே வைத்திருப்பார்கள். வாழ்க் கைச் செலவுச் சுமையில் 75 சதவீதக் குறைப்பு எந்தளவுக்கு சாத்தியமாகும் என்பது முக்கியமான கேள்வி.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியில்லாமல் அரசாங்கத்தினால் எதையும் செய்யமுடியாமல் இருக்கலாம். ஆனால், அதனால் விதிக்கப்படுகின்ற நிபந்தனைகளை நிறைவேற்றுகின்றபோது அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் கடுமுனைப்பான நடவடிக்கைகள் சமூக அமைதியின்மையை தோற்றுவிக்கக்கூடியவை

அறகலயவைப் போன்ற மக்கள் கிளர்ச்சி மீண்டும் மூளுவதற்கு சாத்தியம் இல்லை என்று அரசாங்கம் மெத்தனமாக

(14ஆம் பக்கம் பார்க்க)

# கனடாவில் பிரியங்கா, பிருத்திக்கா சகோதரிகளின் வீணை அரங்கப்பிரவேசம்

**குரு அரவிந்தன்**

கடந்த 23 ஆம் திகதி கனடாவின் ரொறன்ரோவில் 'செப்பேட்' வீதியில் உள்ள சீன கலாச்சார மண்டபத்தில் பிரி யங்கா, பிருத்திக்கா ஆகிய சகோதரி களின் வீணை அரங்கப்பிரவேசம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. சிறிமதி. குகனேஸ்வரி சத்தியமூர்த்தி அவர்களின் மாணவிகளின் இந்த அரங்கேற்றத்திற்கு வைத்திய கலாநிதி சயந்தன் சாய்சர்மா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். கனடா தமிழர்தகவல் இதழின் பிரதம ஆசிரியர் திரு. எஸ். திருச்செல்வம் மற்றும் எழுத்தாளர் குரு அரவிந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர் களாகக் கலந்து கொண்டனர்.



எஸ்.திருச்செல்வம் தனது உரையில் 'தமிழரின் பாரம்பரிய இசைக்கருவி களான தோல், காற்று, நரம்பு வாத்தி யங்கள் பற்றியும், ஒரே மரத்துண்டில் இருந்து தண்டியும், குடமும் குடைந்து செய்யப்பட்டதுதான் 'ஏகாந்தவீணை' என்றும் குறிப்பிட்டு, இந்த அரிய கலையை இத்துடன் கைவிட்டு விடா மல் அடுத்த தலைமுறைக்கும் கொண்டு சேர்க்க வேண்டிய கடமை இவர்களுக்கு இருக்கிறது' என்பதையும் குறிப்பிட்டார்.

எழுத்தாளர் குரு அரவிந்தன், 'பண் டைக்காலம் தொட்டு எமது பாரம்பரிய இசைக்கருவியான வீணை வாசிக்கப் பட்டு வருவதாகக் குறிப்பிட்டு வீணைக் கொடி கொண்ட இலங்கை வேந்தன் இராவணண் சிறந்த வீணையிசைக் கலைஞன் என்பதையும், 'மாசில் வீணையும்' என்று 7 ஆம் நூற்றாண்டில் திருநாவுக்கரசரும், 'எம்மிறை நல்வீணை வாசிக்குமே' என்று சம்பந்தரும், 'நல்ல தோர் வீணை செய்தே' என்ற பாரதியா ரும், அதையே பாரதிதாசன் 'துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து' என்று பாடி யிருப்பதையும் எடுத்துக் காட்டினார். இந்தப் பாரம்பரியக் கலையைக் கற்றவர் கள் சிலர்தான் கனடாவில் இருப்பதால், இவர்கள் இதை மறந்துவிடாது அடுத்த தலைமுறையினரிடமும் எடுத்துச்சென்று கற்பிக்கவேண்டும் என்ற தனது ஆதங்கத் தையும் அவர் வெளிப்படுத்தினார்.





பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கலாநிதி சயந்தன் சாய்சர்மா அவர்கள் ஒவ்வொரு பாடல்களிலும் உள்ள நிறைகுறைகளைத் தெரிவித்து, இவற்றைத் திறமையாகக் கற்பித்த குரு வான குகனேஸ்வரி சத்தியமூர்த்தி யையும், ஆர்வத்தோடு இந்த வீணை இசையைக் கற்பிக்க வைத்த பெற்றோர் களான திரு. திருமதி ஜெயரட்ணம் அவர்களையும் பாராட்டினார்.

இந்த நிகழ்வில் இவர்களின் அம் மம்மா திருமதி தனலட்சுமியும் பேர்த்தி யும் ஒன்றாக இணைந்து மேடையில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடியதையும், 'சின்னஞ் சிறுகிளியே,' 'துன்பம் நேர்கை யில் யாழ் எடுத்து' போன்ற பாடல்களை இவர்கள் மீட்டிய போதும் அதிக கர வொ ணலியுடன் சபையோர் பாராட்டி யிருந்தனர். இந்த நிகழ்வுக்கு சிறிவாசு தேவன் இராஜலிங்கம், ஆனந்தகுமார் நடராஜா, சயந்தவி குலேந்திரராஜா, ரகுராம் கிருஸ்ணராஜா, ஜதீசன் ரவீந் திரன், மோகனன் ரவீந்திரன் ஆகியோர் முன்னணி இசை வழங்கினார்கள்.

நன்றியுரை வழங்கிய, பிரித்தானியா வில் இருந்து வருகை தந்த பாவலர் பால ரவி அவர்கள் கவிதை வடிவில் நன்றி யுரை வழங்கியிருந்தார். நிகழ்ச்சிகளை ரஞ்ஜித் பரணிவாசகம், மைதிலி பரமேஸ் வரன் ஆகியோர் தொகுத்து வழங்கியிருந்தனர்.

---




# வியுக்தியர் பதில்கள்

**க. தில்லைநாதன்,**
**மட்டுவில், சாவகச்சேரி**

**கேள்வி:** யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்தவர்கள் அனைவரும் 2025 ஆம் ஆண்டுக்குள் மீள் குடியமர்த்தப் படவேண்டும் என்று யாழ்ப்பாணத்தில் வைத்து அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளாரே. அது நடக்கும் என்று நீங்கள் நம்புகின்றீர்களா?

**வியுக்தியார்:** காணிப்பிரச்னைக்கு அடுத்த பெப்ர வரியில் இறுதித் தீர்வு வழங்கப்படும் என்றும் அதே கூட்டத்தில்தானே அவர் அறிவித்திருக்கிறார். காணி களை விடுவிப்பது பற்றிய அறிவிப்பு வந்த பின்னர் தானே இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியேற்றுவது பற்றி யோசிக்கலாம். அங்கிருந்த அதிகாரிகள் தான் அது குறித்து கேள்வி எழுப்பாவிட்டாலும், அரசியல்வாதிக ளாவது கேட்டிருக்கலாம். காணிகளை விடுவித்தால் தானே மக்களை - அதாவது இடம்பெயர்ந்தவர்களை குடியேற்றலாம். எல்லாவற்றுக்கும் மேலாக, அடுத்த ஏழு மாதங்களில் செய்யக்கூடியதை முதலில் செய்யுங் கள் என்றாவது கேட்டிருக்கவேண்டாமா?

---

**செல்வா. கேசவன்**
**சங்கிலியன் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** செங்கடலில் கப்பல்கள்மீது ஏமன் நாட்டின் ஹூதி போராளிகள் தாக்குதல் நடாத்துவதைத் தொடந்து கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக இலங்கை கடற்படைக்கப்பலை அனுப்புவதற்கு உடன் பட்டுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளாரே. அப்போ நமது கடற்படைக்கும் இப்போது வேலை கிடைத்து விட்டதுபோல இருக்கின் றதே?

**வியுக்தியார்:** அது வேறு ஒன்றுமில்லை. அவர்க ளுக்கு இதுபோன்ற விடயங்களில். அதாவது யாராவது தாக்கினால் எதிர்த்து தாக்குவது மட்டும்தான் தெரி யுமோ தெரியவில்லை. நமது கடல் ஊடாக தினமும் நாட்டுக்குள் வரும் கஞ்சாவையும் போதைப்பொட்க ளையும் தடுக்க அவர்களால் முடியவில்லை. ஆனால் மற்றயவர்களுடன் சண்டைபிடிப்பதற்காக அனுப்பப் படுகிறார்கள். அவர்களுக்கு தெரிந்தது சண்டை பிடிக்க மட்டும்தானோ தெரியவில்லையே. இனி என்ன நமது படையினரைக் குறைக்கவேண்டும் என்று யாரும் குரல் எழுப்ப மாட்டார்கள் என்று நினைக்கின்றேன்.

**எம். கௌதம், அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** இலங்கை தமிழரசு கட்சியின் தலைமை பத விக்கு அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான சி. சிறீதரனே பொருத்தமானவர் என்று தமிழ் மக்கள் கூட் டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன் தெரிவித் துள்ள அதேவேளை, தலைவர் ஆவதற்கான தகுதிகள் சுமந்திரன் எம். பிக்கு இருந்தாலும் அவர் மற்றவர்களு டன் இணைந்து செயல்படக்கூடியவர் இல்லை என்றும் கூறியுள்ளார். இது பற்றி உங்களுக்கு என்ன தோன்று கின்றது.?

வியுக்தியார்: எனக்கு என்னவோ இது சுமந்திரனுக் கான பிரச்சாரம் போலத்தான் தெரிகின்றது. தமிழ் அரசின் தொண்டர்களைப் பொறுத்தவரை அவர்கள் விக்னேஸ்வரன் குறித்து என்ன கருத்துடன் இருக்கி றார்கள் என்பது நமக்கு தெரிந்ததுதான். அப்படியிருக் கையில் மனுசன் இப்படிக் கூறினால் எப்படி இருக்கும் என்று நினைத்துப் பாருங்கள். சுமந்திரனுக்கு தகுதி இருக்கின்றது என்றும் கூறும் அவர் ஆனால், அவர் மற்றவர்களுடன் இணைந்து செயல்படக்கூடியவர் அல்ல என்றும் கூறுகிறார். தமிழ் அரசுக் காரர்கள்தான் மற்றவர்களுடன் இணைந்து செய்படுவதை விரும்பாமல் தானே பிரிந்து சென்றார்கள். அவர்களுக்கெல்லாம் தனித்து செயற்படுவதுதான் விருப்பமானது. ஒரு தேர்த லில் தனித்துபோட்டியிட்டு கையை சுட்டுக்கொள் ளும்வரை அவர்கள் அப்படித்தான் சிந்திப்பார்கள்.

**இரா. இராஜேஸ்கரன், ஸ்ரேசன் வீதி, வவுனியா.**

**கேள்வி:** இலங்கைப் பிரஜைகள் இரணைதீவிற்குச் செல்வதற்கு கடற்படையினர் தடை விதிக்கக் கூடாது என நாட்டின் மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவு றுத்தியுள்ளது என்று செய்தியைப் பார்த்தேன். அப்படியொரு நாடு எங்கே இருக்கின்றது என்று கூகு ளில் தேடிப்பார்த்தேன். அப்படியொரு நாடே இல்லாத போது எதற்கு கடற்படையினர் தடைவிதிக்கின்றனர்?

**வியுக்தியார்:** என்ன இராஜேஸ்வரன், வியுக்தியா ருக்கே பகிடியா? இரணைதீவு என்பது நமது நாட்டில் பூநகரிக்கு அருகே உள்ள ஒரு சிறிய தீவு. நமது கடற் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள அந்த தீவுக்கு செல்வதெனில் கடற்படையின் அனுமதியுடன்தான் செல்லவேண்டும். அங்கே நமது மக்களும் குடியேறி வாழ்கின்றபோதிலும் அவர்களுக்கும் இன்னமும் மீட்சி கிடைக்கவில்லை. எழுபது வருடங்களாக தீர்வுக்காக நாம் எல்லாம் காத்திருந்துவிட்டு இப்போது அதனைப் பற்றி சிந்திக்காமல் வாழ்வதுபோல அவர்களும் பழக்கப்படுத்திக் கொண்டார்களோ தெரியவில்லை.

**எஸ். விஜயரூபன்,**
**கரவெட்டி மத்தி, கரவெட்டி,**

**கேள்வி:** 2024ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டு என்று சிலர் கூறினாலும், அரசாங்கம் 100வீதம் வெற்றிகரமான பாதையில் பயணிக்கும் போதுதான் தேர்தல் நடத்தப் படும் என்று அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரி வித்துள்ளாரே.?

**வியுக்தியார்:** அவர் கொஞ்சக்காலம் மகிந்தவின் அமைச் சரவையிலும் இருந்தவரல்லவா? இது ஒரு குடி ஆட்சி நாடு என்பது அவருக்கு மறந்துவிட்டதோ தெரியவில்லையே. அவர் இன்னமும் முடிஆட்சி நடப்பதாகத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறாரோ என்னவோ?

# எகிப்தின் போர் நிறுத்த திட்டம்: ஹமாஸ் நிராகரிப்பால் யாருக்கு அழிவு?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டு, முன்பு ஹமாஸ் ஆளுகைக் குட்பட்ட பிரதேசத்தில் 2.3 மில்லியனில் பெரும்பான்மையான மக்கள் இடம் பெயர்ந்து உள்ளனர். காசா பகுதியில் இஸ்ரேலின் போரில் நிரந்தரப் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த ஹமாஸ் மற்றும் அதன் கூட்டணி இஸ்லாமிய ஜிஹாத் இடையே எகிப்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

காசாவில் மனிதாபிமான பேரழிவு தொடர்கிறது, சர்வதேச சமூகம் இதைத் தடுக்க அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும் என காசாவில் போரை முடிவுக்கு கொண்டுவரும் திட்டத்தை எகிப்து முன்வைத்துள்ளது.

காசாவில் 8,200 குழந்தைகள் உட்பட 20,400க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்களைக் கொன்று குவித்த வான்வழி மற்றும் தரைவழிப் போரை இஸ்ரேல் தொடர்கிறது. இவ்வேளை எகிப்தின் காசா போர்நிறுத்த திட்டத்தை விவாதிக்க இஸ்ரேலின் பிளவுபட்ட போர் அமைச்சரவையும் கூடி ஆராய்ந்துள்ளது.

ஆனால் இத்திட்டத்தின் படி காசாவில் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான ஆலோசனையை ஹமாஸ் நிராகரிப்பதாக அறிவித்து உள்ளது.

**எகிப்தின் முன்மொழிவுகள்**

எகிப்திய அரசால் 25.12.23 திங்களன்று இஸ்ரேல், ஹமாஸ், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய அரசாங்கங்களுக்கு முன்வைக்கப்பட்ட இந்த முன்மொழிவு, காசா பகுதியில் இருந்து இஸ்ரேல் முழுமையாக வெளியேறுவதையும், ஹமாஸ் கைதிகள் மற்றும் பல பாலஸ்தீனிய கைதிகள் விடுவிக்கப்படுவதையும், பாலஸ்தீன அரசாங்கம் நிறுவப்படுவதை, வளைகுடா நாடான கத்தாருடன் இணைந்து இந்த முன்மொழிவு உருவாக்கப்பட்டது.

பல சுற்று கைதிகள் பரிமாற்றங்களை உள்ளடக்கியதுடன், நிரந்தர போர்நிறுத்தத்திற்கு ஈடாக காசா பகுதியில் உள்ள அதிகாரத்தை ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் கைவிட வேண்டும் என்று எகிப்து முன்மொழிகிறது என எகிப்திய ஊடக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் அத்தகைய முன்மொழிவை நிராகரித்ததாக எகிப்திய வட்டாரங்கள் பின்னர் தெரிவித்தன. காசா போருக்குப் பிந்தைய எதிர்காலத்தை பாலஸ்தீனர்களே தீர்மானிக்க வேண்டும், வெளிநாட்டு ஆணையின்படி அல்ல என்று இரு குழுக்களின் தலைவர்களும் பலமுறை வலியுறுத்தி வருகின்றனர்.

இஸ்ரேலிய பிரதம மந்திரி பெஞ்சமின் நெதன்யாகு, ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் முழுதாக அழிக்கப்பட வேண்டும் என்று இஸ்ரேல் இராணுவத்திடம் கோரியுள்ளார். இது காசா மக்களின் அனைத்து ஆளுகை திறன்களையும் தகர்ப்பதுடன் காசா மக்களின் வாழ்வை சீரழிக்கும்.


**எகிப்து போர்நிறுத்த பரிந்துரை**

எகிப்து பல கட்ட போர்நிறுத்தத்தை பரிந்துரைத்துள்ளது. ஆரம்ப தற்காலிக போர்நிறுத்தம் ஒன்று அல்லது இரண்டு வாரங்களுக்கு நீடிக்கும் என்று எகிப்திய வட்டாரங்கள் தெரிவித்தன. தற்காலிக போர் நிறுத்தம் மீள புதுப்பிக்கப்படலாம்.




**எகிப்தின் போர்நிறுத்த வரைவை ஹமாஸ் நிராகரித்தாலும், இஸ்ரேலுடன் இன்னமும் எவ்வளவு காலம் போரைத் தொடர்வார்கள் என்பதும் கேள்விக்குறியே**

பாலஸ்தீன அதிகாரிகளின் கூற்றுப் படி, இது மூன்று கட்ட போர்நிறுத்தம் என்று கூறப்பட்டது.





முதல் 10 நாள் மனிதாபிமான போர் நிறுத்தத்தின் போது ஹமாஸ் சிறைபிடிக்கப்பட்ட பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் அனைவரையும் விடுவிக்கும்.

பதிலுக்கு, இஸ்ரேல் ஒப்புக்கொள்ளப்பட்ட எண்ணிக்கையிலான பாலஸ்தீன கைதிகளை அதே வகைகளில் விடுவிக்கும்.

அனைத்து சண்டைகளையும் நிறுத்தி, மக்கள் வசிக்கும் பகுதிக்கு மருத்துவ மற்றும் உணவு உதவி, எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு விநியோகத்தை அனுமதிக்கும். வடக்கு காசாவிற்கு மக்கள் மீண்டும் செல்லவும் இது அனுமதிக்கும்.

இரண்டாவது கட்டத்தில் ஹமாஸ் அனைத்து இஸ்ரேலிய பெண் வீரர்களையும் விடுவிக்கும். பதிலுக்கு இஸ்ரேல் சிறையில் அடைக்கப்பட்ட பாலஸ்தீனர்களின் மற்றொரு குழுவை விடுவிக்கும். மூன்றாவது கட்டம் ஒரு மாதம் நீடிக்கும், மேலும் பேச்சுவார்த்தைகள் நடவடிக்கையில் பாலஸ்தீனிய கைதிகளின் எண்ணிக்கைக்கு ஈடாக ஹமாஸ் காவலில் உள்ள அனைத்து பிணைக் கைதிகளையும் விடுவிக்க வேண்டும்.

இஸ்ரேல் காசாவில் இருந்து டாங்கிகளை திரும்பப் பெறுவதுடன் இரு தரப்பும் அனைத்து போர் விரோத நடவடிக்கைகளையும் நிறுத்தும்.

**எகிப்தின் திட்டம் ஹமாஸ் நிராகரிப்பு**

கெய்ரோவில் எகிப்திய மத்தியஸ்தர்களுடன் தனித்தனியாக பேச்சுவார்த்தை நடத்தி வரும் ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் ஆகிய இரண்டும் இஸ்ரேலின் ‘ஆக்கிரமிப்பு” முடிவுக்கு வரும் வரை சண்டையை நிறுத்தாது என்று தெரிவித்தன.

இஸ்ரேலிய சிறைகளில் உள்ள அனைத்து பாலஸ்தீனியர்களும் விடுவிக்கப்பட வேண்டும் என்று ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தத்தை வலியுறுத்துகின்றன. இஸ்ரேல் மற்றொரு மட்டுப்படுத்தப் பட்ட போர்நிறுத்தத்திற்கு கதவை திறந்துள்ளது. ஆனால் போரை நிறுத்த வேண்டும் மற்றும் காசாவில் இருந்து படைகளை திரும்பப் பெற வேண்டும் என்ற பாலஸ்தீனிய போராளிகளின் கோரிக்கைகளை நிராகரித்துள்ளது.

**போருக்குப் பிந்தைய காசா நிர்வாகம்:**

போருக்குப் பிந்தைய காசா நிர்வாகம் பற்றிய யோசனையில், காசாவின் நிவாரண உதவி மற்றும் புனரமைப்பு மற்றும் தேர்தலை நடத்தி அரசாங்கத்தை உருவாக்குவதற்கான பேச்சுவார்த்தைகளை எகிப்து உருவாக்கியுள்ளது.

எகிப்தின் இந்த பிரேரணையின் இறுதிக் கட்டம் காசாவிலிருந்து இஸ்ரேல் வெளியேறுவதுடன், இடம்பெயர்ந்தவர்களைத் திரும்ப அனுமதிக்கும்.

இஸ்ரேலின் போர் அமைச்சரவை 25.12.23 திங்களன்று இந்த திட்டத்தை விவாதித்தது. ஆயினும் அதன் இராணுவம் கிறிஸ்துமஸ் விடுமுறையில் காசாவைத் தொடர்ந்து தாக்கி, 12 மணி நேரத்திற்குள் குறைந்தது 100 பாலஸ்தீனியர்களைக் கொன்றது.

தற்போது எஞ்சிய பிணைக் கைதிகளை வீட்டிற்கு அழைத்து வருவதற்கு கடுமையான அழுத்தத்திற்கு உள்ளான இஸ்ரேல் அமைச்சரவை பிளவுபட்டுள்ளது. இதனால் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் சில நிபந்தனைகளை ஏற்க கூடும் என்று நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவும் ஹமாஸை ஒழிப்பதற்கான அவரின் பிரகடனத்தில் இருந்து இன்னமும் பின்வாங்கவில்லை. ஒருபுறம் நெதன்யாகு மறைமுகமாக ஹமாஸுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறார், ஆனால் அதே நேரத்தில் அவரது முக்கிய திட்டம் ஹமாஸை அடியோடு ஒழிப்பதாகும் என்பது சாத்தியப்பட முடியாததாகும்.

ஆயினும் எகிப்தின் போர்நிறுத்த வரைவை ஹமாஸ் நிராகரித்தாலும், இஸ்ரேலுடன் இன்னமும் எவ்வளவு காலம் போரைத் தொடர்வார்கள் என்பதும் கேள்விக்குறியே? அத்துடன் எகிப்தின் போர் நிறுத்த வரைவை ஹமாஸ் மறுதலிப்பால் யாருக்கு அழிவு என்பதை சொல்லித் தெரியவேண்டியதில்லை.







# தங்கையை கர்ப்பமாக்கிய அண்ணன் கைதானார்!

மட்டக்களப்பு, ஜன. 07

தனது தங்கையை கர்ப்பமாக்கிய அண்ணனை கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஏ. எஸ். எம் .ஏ. றஹீம் தெரிவித்தார்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி பிரதேசத்தில் 24 வயது அண்ணன் 14 வயதேயான தனது தங்கையை கர்ப்பமாக்கினார். இந்தக் குற்றத்துக்காகவே அவர் கைது செய்யப்பட்டார்.

ஐந்து மாத கர்ப்பவதியான தங்கை மட்டக்களப்பு போதனா மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கைதான சந்தேக நபர் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்து வருவவதாகவும் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)

# ஈழத்தமிழர்கள்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் சித்தார் மேதை ரவி சங்கர் நாதஸ்வர கலைஞர்களான சேது ராமன் பொன்னுசாமி, நாமகிரிபேட்டை கிருஷ்ணன் போன்றோர் யாழ்ப்பாணம் வந்து இசைக்கச்சேரிகளை நிகழ்த்தியிருந்தனர்.

இதன்பின்னர் நான்கு தசாப்தகாலம் இசை உறவுப்பாலம் தமிழகத்துக்கும், யாழ்ப்பாணத்துக்குமிடையே நலிவுற்றிருந்தது. இருந்தபோதிலும் இசைக்கலை மீது யாழ்ப்பாணத்தவர் கொண்டுள்ள பேரபிமானத்தையும் அதில் அவர்கள் வெளிப்படுத்தும் திறமையை வெளிப்படுத்துவதாகவே கில்மிஷாவின் தமிழக வெற்றி அமைந்துள்ளது.

இந்நிலையில் கில்மிஷாவின் இசைத்துறை வெற்றி தமிழகத்தவர்களுக்கும் முழு உலகுக்குமே வழங்கியுள்ள செய்தி என்னவெனில் துாரதிர்ஷ்ட வசமான சூழ்நிலைகள் காரணமாக யாழ்ப்பாண மக்கள் உலகளாவிய ரீதியில் அகதிகள், இடம்பெயர்ந்தோர், அரசியல் தஞ்சம் கோருவோர் என்ற அடையாளங்களுக்குள்ளானார்கள்.

ஆனால் அவர்களுக்குரிய சந்தர்ப்பங்கள், சூழ்நிலைகள் வாய்க்கப்பெற்றால் அவர்கள் எந்தவொரு துறையிலும் சாதனையாளர்களகவே இருப்பார்கள் என்ற செய்தியையே கில்மிஷா வழங்கியுள்ளார்.

புலம் பெயர்ந்த தமிழர்களில் அநேகர் கூட தாம் வாழுகின்ற நாடுகளில் தாம் ஈடுபாடு கொண்டுள்ள துறைகளில் திறமைகளை வெளிப்படுத்தி சாதனையாளர்களாகவே இருக்கின்றனர். அத்துடன் அவர்கள் புலம்பெயர்ந்துள்ள தேசத்தவர்களின் பாராட்டுக்களுக்குள்ளானவர்களாகவும் இருக்கின்றனர் என்பதையும் இத்தருணத்தில் குறிப்பிட வேண்டியதாக இருக்கின்றது.

# ஜனாதிபதித் தேர்தல்....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதில் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் தலைவராக வருமிடத்து தற்போது அவருக்கும் ரணிலுக்கும் இடையில் நிலவும் ஊடல் முடிவுக்கு வருமென எதிர்பார்க்கலாம். எவ்வாறெனினும் இவர்களின் தீர்மானம் தனியே இவர்களின் கைகளில் இருப்பதில்லை என்பது கடந்தகால வரலாறு. இவ்வாறு எதிர்த்தரப்புகளில் காணப்படும் தளம்பல் நிலைமைகள் ரணிலுக்குச் சாதகமானவை என்பதற்கப்பால் அவற்றைத் தனக்குச் சாதகமாக்கும் வல்லமையும் ரணிலுக்குண்டு.

இலங்கையில் யார் ஜனாதிபதியாக வரவேண்டும் அல்லது இருக்க வேண்டுமென்பதில் இலங்கை மக்களின் விருப்பம் மட்டுமல்லாமல் பிராந்திய மற்றும் சர்வதேச சக்திகள் சிலவற்றின் விருப்பமும் கலந்துள்ளது என்பது இரகசியானது ஒன்றல்ல. இதில் பிராந்திய நலனைக் கருத்திற் கொண்டு அமெரிக்கா, இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகளின் எதிர்பார்ப்புகள் உண்டு. அவ்வகையில் ரணில் எப்போதுமே மேற்குலகின் நண்பராகக் கருதப்பட்டு வருபவர். இதனால் அந்நாடுகளினால் வரவேற்கப்படுவார் என்பதில் ஐயமில்லை. ரணில் மேற்குலகு சார்பானவர் என்ற நோக்கில் இந்தியாவால் அதிகம் விரும்பப்படாத ஒருவராகவே பார்க்கப்பட்டார். இதனால்தான் நாட்டில் ஏற்பட்ட கொந்தளிப்பைத் தவிர்க்கும் நோக்கில் பிரதமரை மாற்ற கோதாபய முன்வந்தபோது அதனை ரணிலிடம் கையளிப்பதை இந்தியா விரும்பவில்லை என்ற நம்பிக்கையான செய்திகளும் உள்ளன. ஆனாலும் தற்போது இந்தியாவுக்கும் ரணிலுக்கும் இடையில் நல்ல உறவு நிலவுகிறது. சீன ஆய்வுக் கப்பல்களுக்கான ஒருவருடத் தடைகூட இந் நோக்கத்திற்கானதே. இவை ரணிலுக்குச் சாதகமான ஒன்று எனலாம். அதே வேளை இதனடிப்படையில் சீன உறவில் விரிசல் ஏற்படுவது சவாலானதொன்றாகும். 2015 ஆம் ஆண்டுத் தேர்தலில் மகிந்தவின் வெற்றிக்காக சீனாவின் மறைமுக ஈடுபாடுகள் காணப்பட்டன என்பது தெரிந்ததொன்றே. அவ்வகையில் இம்முறையும் தனக்குச் சார்பான ஒருவரின் வெற்றிக்காக அது ஈடுபாடு காட்டுமானால் அது ரணிலுக்கு சவாலாகவே இருக்கும்.

சஜித் தலைமயிலான ஐக்கிய மக்கள் சக்தி பரந்துபட்ட கூட்டணியை உருவாக்கி வருவது ரணிலுக்கான முக்கிய சவால்களில் ஒன்றாக உள்ளது. பொதுஜன பெரமுன, சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பற்றில் இருந்து வெளியேறியவர்கள் ஒன்றில் சஜித்திடம் அல்லது ரணிலிடமே தஞ்சமடைய வேண்டியுள்ளது. ரணில் மகிந்த தரப்புடன் இதுவரை நிற்பதால் அதிலிருந்து பிரிந்தவர்கள் சஜித்திடம் செல்லும் வாய்ப்பே அதிகமுள்ளது. தற்போது அவர்களின் பலம் கூடிவருவது ரணிலுக்கு பெரிய சவாலைக் கொண்டுவரும். இதனைவிடப் பெரிய சவாலாக இருப்பது நாட்டை மீட்பதற்கான ரணிலின் பொருளாதார நடவடிக்கைகளால் மக்கள் மீது ஏற்றப்படும் பாரிய சுமைகள். இவை ரணில் அரசு மீது பாரிய வெறுப்பை ஏற்படுத்தும்போது அதனை எதிர்த்தரப்புகள் தமக்குச் சாதகமாக அறுவடை செய்து கொள்ளும். இவற்றுடன் அரச முயற்சிகளைத் தனியார்மயமாக்குவதற்கு எதிரான தொழிலாளர் போராட்டங்கள் எதிர்த்தரப்புக்கு இலவச பரப்புரைகளாக மாறும். இதையொத்த ஒரு நிலைமை நாட்டில் நிலவியதாலேயே 1977இல் சிறிமா அம்மையாரின் அரசாங்கம் தோல்வி கண்டதையும் தனது மாமானார் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா 5-6 பெரும்பான்மை பலம் கொண்ட தேர்தல் வெற்றியைப் பெற்றதையும் அத்தேர்தலில் போட்டியிட்ட ரணில் மறந்திருக்கமாட்டார்.

இதனால் தேர்தல் நெருங்கும்போது நாடு மீட்சியடைந்துவிட்டது என்ற பேரில் மக்களின் சுமைகளைக் குறைக்கும் அறிவிப்புகள் அடுத்தடுத்து வருவதற்கான வாய்ப்புகள் நிறையவே உண்டு. அதனை மேற்குலகின் விருப்பத்திற்கிணங்க அவ்வுலகின் செல்வாக்குக்கு உட்பட்டு இயங்கும் சர்வதேச நாணய நிதியமும் அனுமதிக்கும். அத்துடன் அந்நேரத்தில் வெளிநாட்டு உதவிகள் அதிகரித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

•

# ஒரு சுகமான தொடக்கத்தின்....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுரேந்திரன், பகவானுக்கு உறுதியளித்திருக்கிறாராம். கேட்க மகிழ்ச்சியான செய்தி தான்" என்று குருவி நண்பர் தன் செவ்வாய்க் கிழமை கட்டுரையில் கூறியிருந்தார். தவறாகப் புரிந்து கொண்டீர்கள் இந்தப் புரிதலுக்கு நான் பொறுப்பென்றால் தயவு செய்து என்னை மன்னிக்கவும்.

ஈழப்போர் முடிவுக்குப் பின், கடந்த 14 ஆண்டுகளாக, பல்வேறு தமிழ்த் தலைவர்களுடனான இரகசியப் பேச்சுகளுக்குப் பின்னர், சிங்கள ஆட்சியாளர்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டது குறித்த குருவியின் மனவருத்தம் எனக்குப் புரிகிறது. அதே வருத்தம், ஏமாற்றம் எனக்கும் இருக்கிறது. அதனால்தான் எனது 'ஈழநாடு' கட்டுரைகளில், ஆட்சியாளர்கள் மற்றும் சர்வதேச சமுதாயத்திடம் பேச்சு வார்த்தை நடத்தவும் தங்களுக்கு நீண்ட காலமாக மறுக்கப்பட்ட நீதியைப் பெறவும், வரும் சந்ததியினர் பாதுகாப்பான வளர்ச்சியடைந்த சூழலில் வாழவுமான முயற்சிகளை பொது மக்கள் தாங்களே கையில் எடுக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். இமாலயப் பிரகடனத்தை உருவாக்கியவர்கள், நேபாளத்திற்குப் பறக்கும் முன் தன்னுடன் ஆலோசிக்காத கோபத்தில் அதன் ஆழத்தை ஆராயாமல் முற்றிலும் புறக்கணிப்பதை விடுத்து, சில தனிப்பட்ட சுயநல லாபங்களைத் தவிர, இரகசியச் சந்திப்புகளினால் எதையும் சாதிக்க முடியாத தமிழ்த் தலைவர்களுக்கும் பொறுப்புக் கூறல் இருக்க வேண்டும் என்றும் குருவி கோரலாமே!

குருவி நண்பரே! எனது கடந்த கட்டுரையை மீண்டும் வாசியுங்கள், ஒரே ஒரு முறை. ஏனெனில், தமிழர் எதிர்காலம் மற்றும் இலங்கை நலன் குறித்த அக்கறை கொண்ட ஓர் அன்பான நண்பர் நீங்கள். தவற விடப்பட்ட வாய்ப்புகள் குறித்த எனது ஆதங்கமும் இன்னொரு வாய்ப்பு வீணாகிவிடக்கூடாதே என்ற ஏக்கமும் உங்களால் புரிந்து கொள்ளக்கூடியவையே. கடந்த காலங்களில் தோல்வியடைந்த பேச்சுவார்த்தைகளுக்கும் தற்போதைய இமாலய முயற்சிக்கும் இடையிலான இரண்டு முக்கிய வித்தியாசங்களை எனது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன்.

முதலாவதாக, எப்போதும் ஆதிக்க மனப்போக்கில் இருக்கும் பௌத்த மத குருமார்கள் இந்தச் சமாதான முயற்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் இரண்டாவதாக, இந்த முன்னெடுப்புக்கு ஒரு வலுவான சர்வதேச ஆதரவு இருப்பதாகத் தெரிகிறது. இந்த அந்நிய சக்திகளின் நோக்கம், தங்கள் இசைக்கேற்ப ஆடக் கூடிய ரணிலை மீண்டும் தேர்தலில் வெற்றி பெறச்செய்து ஆட்சியில் அமர்த்துவதாக இருக்கலாம். தமிழ் மக்களின் நலன் குறித்த அக்கறை இல்லாமல் இருக்கலாம். அதிலும் தவறில்லை. எனது "ஈழநாடு" கட்டுரைகளில் நான் பல முறை கூறியுள்ளேன் - இந்து மாகடல் பிராந்தியத்தில் இலங்கை ஒரு முக்கியமான புள்ளியாகத் தற்போது உருவாகியிருப்பதால், அதை மையப்படுத்திய புவி சார் அரசியல் விளையாடப்படுகிறது. இச் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு, தமிழர்கள் ஒன்று சேர்ந்து, தங்களுக்கான நிரந்தரத் தீர்வுகளை எட்ட விழைய வேண்டியது காலத்தின் கட்டாயம். ஒவ்வொருவரையும் துரோகியாகப் பார்த்து, ஒவ்வொன்றிலும் சதித் திட்டம் இருப்பதாகத் தொடர்ந்து சந்தேகித்து வந்தால், இன்னும் இன்னும் நேர விரயம் தான் ஏற்படும். வாருங்கள், குருவியாரே! சேர்ந்து பறப்போம், விண்ணை வெல்ல. இறைவன் நமக்கு அருள் புரியட்டும். வணக்கம்.

•

# நரகத்தில் ஓர் இடைவேளைக்கு...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

நினைக்கிறது போலும். அவ்வாறு மூண்டாலும் கூட படைபலம் கொண்டு ஆரம்பத்திலேயே அடக்கிவிடலாம் என்று அதற்கு நம்பிக்கை இருக்கக்கூடும்.

சர்வதேச நாணய நிதியத்தின் இறுக்கமான கடனுதவி நிபந்தனைகளை நடைமுறைப்படுத்தியதன் விளைவாக ஆர்ஜன்டீனா போன்ற நாடுகளில் மூண்ட அரசியல் - சமூக எழுச்சிகளில் இருந்து எமது அரசாங்கம் மாத்திரமல்ல நாணய நிதியமும் பாடத்தைப் படிக்கவேண்டும். லத்தீன் அமெரிக்க, மத்திய கிழக்கு, வட ஆபிரிக்க பிராந்திய நாடுகளிலும் அத்தகைய எழுச்சிகள் ஏற்பட்டன. எமது பிராந்திய நாடான பாகிஸ்தானும் அதே பிரச்சினையை எதிர்நோக்குகிறது.

**மனித உரிமை மீறல்கள்**

சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகள் அசமத்துவத்தை அதிகரித்து அமைதியின்மையை தூண்டுவதாக பல சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருக்கின்றன.

"சிக்கன நடவடிக்கைகள் என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் அத்தியாவசிய பொதுச்சேவைகள் மீதான அரசாங்கத்தின் செலவினக் குறைப்பும் பிற்போக்கான பெருமளவு வரிவிதிப்புகளும் மனித உரிமைகளை மலினப்படுத்தியிருக்கின்றன என்பதற்கு வரலாற்றில் தாராளமான சான்றுகள் இருக்கின்றன. வறுமையையும் அசமத்துவத்தையும் மேலும் தீவிரப்படுத்துவதற்கும் மனித உரிமைகள் மலினப்படுத்தப்படுவதற்கும் வழி வகுக்கும் கொள்கைகளை சர்வதேச நாணய நிதியம் நாடுகள் மீது திணிக்கிறது. சர்வதேச நாணய நிதியத்தின் சொந்த உள்ளக ஆய்வுகளே அதன் கொள்கைகள் நாடுகளின் கடன்களைக் குறைப்பதில் பொதுவில் பயனுறுதியுடைய விளைவுகளை ஏற்படுத்தவில்லை என்பதைப் புலப்படுத்துகின்றன. 2023 ஏப்ரிலில் வெளியிடப்பட்ட நிதியத்தின் "உலகப் பொருளாதார நோக்கு" என்ற அறிக்கையில் சிக்கனத் திட்டங்கள் கடன் விகிதங்களை ஒரு சராசரி அடிப்படையில் குறைக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது" என்று மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு, "சர்வதேச நாணய நிதியம் சிக்கன கடன நிபந்தனைகளினால் உரிமைகள் மலினப்படுத்தப்படும் ஆபத்து - அதிகரிக்கும் அசமத்துவம் குறைபாடுடைய நிவாரண முயற்சிகளும்" என்ற தலைப்பில் அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருக்கிறது.

சிக்கன நடவடிக்கைகளை முன்னெடுக்கும்போது அரசாங்கங்களும் நிதி நிறுவனங்களும் மனித உரிமைகள் மீதான தாக்கம் குறித்து மதிப்பீட்டைச் செய்யவேண்டும் என்று வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு வழிகாட்டல் கோட்பாடுகள் கூறுகின்றன. ஆனால் சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளும் நிபந்தனைகளும் அந்த கோட்பாடுகளுக்கு இசைவானவையாக இல்லை என்பதை அனுபவங்கள் உணர்த்துகின்றன.

**ஐ.எம்.எவ். கலகங்கள்**

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன்களைப் பெற்ற ஏனைய நாடுகளின் அனுபவங்களில் இருந்து இலங்கை அரசாங்கம் படிப்பனைகளைப் பெற்று நிதானமாக நடந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு இருப்பதாக தெரியவில்லை.

அந்த நாடுகளில் மக்கள் மத்தியில் தோன்றிய அமைதியின்மையை "சர்வதேச நாணய நிதியக் கலகங்கள்" ( IMF Riots) என்றே அழைக்கப்படுகின்றன. இலங்கையும் அத்தகைய கலகம் ஒன்றைக் காணுமா இல்லையா என்பது அடுத்து வரும் நாட்களில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளிலேயே முற்றிலும் தங்கியிருக்கிறது.

## 9லட்சத்தை....

காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பத்தரமுல்லை, வவுனியா, கண்டி, மாத்தறை மற்றும் குருநாகல் ஆகிய இடங்களில் உள்ள குடிவரவு - குடிய கல்வு பிராந்திய பணிமனைகள் இந்த சேவைகளை வழங்கின.

இதேவேளை, கடந்த வருடம் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்களின் எண்ணிக்கை 7 ஆயிரத்து 387 ஆகும். (ஐ)

## கட்டைக்காட்டில்....

படையினரால் கைப்பற்றப்பட்டது.

போதைப்பொருள் ஒழிப்பை முன்னிறுத்தி கட்டைக்காட்டில் தினமும் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், கட்டைக்காட்டில் ஒரு பகுதியில் போதைப்பொருள் புதைத்து வைக்கப்பட்டுள்ளது என்று கடற்படையின் புலனாய்வு பிரிவுக்கு தகவல் கிடைத்தது.

இதன் அடிப்படையில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் குறித்த இடத்தை சுற்றிவளைத்த கடற்படையினர் புதைத்து வைக்கப்பட்டிருந்த இடத்தைத் தோண்டினர். இதன்போது, 55 கிலோ கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது. இவ்வாறு கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் பெறுமதி 2 கோடியே 10 இலட்சம் ரூபாய் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-02)

## பொருளாதார....

நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் சர்வமதத் தலைவர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது, வடக்கு மாகாணத்தில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள இடிந்துபோன கோவில்கள், தேவாலயங்களை மீளவும் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி உறுதியளித்தார்.

அனைத்து மத தலைவர்களும் நல்லூர் ஆலய பொறுப்பாளர்களும் விரும்பினால் நல்லூர் ஆலயத்தை விட பெரிய ஆலயத்தை அமைக்க முடியும்.

கிறிஸ்தவ தேவாலயங்களில் நிலவும் பிரச்னைகள் தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பாக மடு தேவாலயத்தில் நிலவும் பிரச்னைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் - என்றும் இதன்போது உறுதியளித்தார்.

யுத்த காலத்தில் வெளியேறிய முஸ்லிம் மக்கள் மீள்குடியேறத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இனம் மற்றும் மதம் என்ற அடிப்படையில் பிளவுபட வேண்டிய அவசியமில்லை. அனைத்து மக்களினதும் உரிமைகளை பெற்றுக்கொண்டு ஒரு நாடாக முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

அனைத்து மதம் தொடர்பிலும் செயல்பட புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் ஆலோசனை குழுக்களை நியமிப்பது குறித்து ஆலோசித்து வருவதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

அநுராதபுரம் மற்றும் கண்டியை மையப்படுத்தி பௌத்த சமய கலாசாரத்தை மேம்படுத்தும் வகையிலும், யாழ்ப்பாணம் மற்றும் தெற்கு கைலாயத்தை மையப்படுத்தி இந்து சமய கலாசாரத்தை மேம்படுத்தும் வகையிலும் ஊக்குவிப்பு திட்டங்களை உருவாக்க எதிர்பார்த்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிக்கைகளை கோரியுள்ளதாக தெரிவித்துள்ள ஜனாதிபதி, நாட்டின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு இந்த செயல்பாடுகள் பெரும் உறுதுணையாக அமையுமெனவும் கூறியுள்ளார்.

இதன்போது, யாழ்ப்பாண சர்வமதக் குழு, ஜனாதிபதியிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவை கையளித்ததாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்தது. (ஐ)

# மியன்மாரில் சிறைப்பட்டுள்ள 56 இலங்கையரை மீட்க இணக்கம்!

கொழும்பு, ஜன. 07

மியன்மாரில் பயங்கரவாத குழு வால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள 56 இலங்கையர்களை சிறப்பு நடவடிக்கை மூலம் மீட்பதற்கு அந்த நாட்டு அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

தாய்லாந்து எல்லைப் பகுதியை அண்மித்து, மியன்மாரின் கெரன் மாகாணத்தின் மியாவெட்டி பகுதியில் பயங்கரவாத குழு ஒன்றால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை இளைஞர், யுவதிகள் 56 பேர் தடுத்து வைக்கப்பட்டு, பல்வேறு கணினி குற்றங்களில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர் என்ற தகவல் அண்மையில் வெளியானது.

இவர்களை சிறப்பு நடவடிக்கை ஒன்றின் மூலம் மீட்பதற்கு அந்த நாட்டு அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை - மியன்மார் வெளிவிவகார அமைச்சர்களுக்கு இடையிலும் பிம்ஸ்ரெக் தூதுவர்கள் மற்றும் மியன்மாரின் பிரதி வெளி விவகார அமைச்சர் இடையிலும் இடம்பெற்ற தொலைபேசி கலந்துரையாடலில் இது தொடர் பில் சாதகமான பதில் கிடைத்ததாக மியன்மாருக்கான இலங்கை தூதுவர் ஜானக பண்டார தெரிவித்துள்ளார்.

பிம்ஸ்ரெக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் இந்தியா, நேபாளம், பங்களாதேஷ் மற்றும் தாய்லாந்து தூதுவர்களுடன் இணைந்து மியன்மாரின் பிரதி வெளிவிவகார அமைச்சருடன் கலந்துரையாடிய தாக அவர்கூறியுள்ளார்.

இந்த இரு கலந்துரையாடல்களும் மிகவும் வெற்றியளித்துள்ளதாகவும் இந்த பிரச்சினை தொடர்பில் சாதகமான பதில் கிடைத்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## மன்னார்....

சச்சிதானந்தனால் எழுதப்பட்டு வெளியிடப்பட்டது. இந்த நூல் மன்னார் மாவட்டம் வரலாற்று காலம் தொட்டு சைவ மக்களின் இடம் என்பதை வரலாற்று மூலாதாரங்களுடன் நிரூபிக்கின்றது. அத்துடன், அங்கு இடம்பெறும் கத்தோலிக்க மத மாற்றம் மற்றும் சைவ மக்கள், சைவ அடையாளங்கள் மீது மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகள் - தாக்குதல்கள் குறித்தும் பேசுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐ.எம்.எவ்வின்.....

போவர் சுமார் மூன்று வாரங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

ஆனால், நிதி நிர்வாக குழுவின் ஒப்புதல் தாமதமானது.

இந்த நிலையில், இலங்கைக்கு இரண்டாவது கடன் தவணையாக 33 கோடி அமெரிக்க டொலர் கிடைத்துள்ளது. இந்த பணம் நாட்டுக்கு சொந்தமானது என்பதாலேயே இந்த நாட்களில் டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்து ரூபாயின் பெறுமதி வலுவடைந்துள்ளதாக நிதி சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## வடக்கு....

தீர்வு காண்பதற்கு செயலூக்கமான நிறுவனமொன்றை நிறுவ எதிர்பார்த்துள்ளதாகவும் ஜனாதிபதி இதன்போது கூறினார்.

யாழ்.மாவட்ட தொழில்துறையினர், மீனவர்கள் மற்றும் விவசாயிகளுடன் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று நடந்த சந்திப்பிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த சந்திப்பில், வடக்கு மாகாணத்தை சேர்ந்த தொழில்துறையினர், மீனவ சமூகம் மற்றும் விவசாயிகள் உள்ளடங்கிய சுமார் 300 பேர் கொண்ட குழு இந்நிகழ்வில் கலந்துகொண்டு, தமது தொழில்துறை தொடர்பான பிரச்னைகள் மற்றும் புதிய முன்மொழிவுகளை ஜனாதிபதியிடம் முன்வைத்தனர்.

இந்த விடயங்கள் குறித்து கவனம் செலுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சில பிரச்னைகளுக்கு அதே நேரத்தில் தீர்வுகளை வழங்கவும் நடவடிக்கை எடுத்தார்.

வட மாகாணத்துக்கு கைத்தொழில் வலயமொன்றை வழங்குமாறு கைத்தொழில்துறையினர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளதுடன், அதற்கு தேவையான காணியை இனங்காணுமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

அத்துடன், மாகாண வர்த்தக ஊக்குவிப்பு நிலையமொன்றை வட மாகாணத்திற்கு விரைவாக வழங்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

வட மாகாணம், தேசிய பொருளாதாரத்திற்கு வினைத்திறனாக பங்களிப்பதற்கு தொழில்துறைகளை அபிவிருத்தி செய்வது இன்றியமையாதது என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இது தொடர்பில் எழுந்துள்ள பிரச்னைகளை தீர்க்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். (ஐ)

# ஊழல்வாதிகளை பாதுகாக்கவே 'வற்'

## சஜித் பிரேமதாஸ சாடல்

கொழும்பு, ஜன. 07

தற்போது விதிக்கப்பட்டுள்ள வற் வரி உண்மையில் வரியல்ல என்றும் மாறாக ஊழல்வாதிகளை பாதுகாக்கும் வரி என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சாடியுள்ளார்.

கம்பஹா - மினுவாங்கொடை பாடசாலை ஒன்றுக்கு ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வி லேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊழல்மிக்க ஆட்சியாளர்கள் ஒவ்வொரு துறையிலும் திருடிய பிறகு நாடு வங்குரோத்தானது. இந்த வங்குரோத்து நிலையில் ஊழல்வாதிகளிடம் இருந்து பணத்தை மீட்பதற்கு பதிலாக ஊழல்வாதிகளை பாதுகாத்துக் கொண்டு நாடு இழந்த பணத்தை மக்களை ஒடுக்கி அவர்களிடமிருந்து பெறப்பட்டு வருவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார். எனவே, இந்த வற் வரியை ஊழல் நிறைந்த வரி என்று அழைக்கலாம்- என்றார். (ஐ)

# மேரி பஸ்தியான் அடிகளாரின் 39ஆவது ஆண்டு நினைவேந்தல்!



மன்னார், ஜன. 07

மன்னாரில் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட வங்காலை புனித ஆனாள் தேவாலய பங்குத் தந்தை மேரி பஸ்தியான் அடிகளாரின் 39ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

வங்காலை புனித ஆனாள் தேவாலயத்தில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் தலைமையில் நேற்று காலை இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இதன் போது படுகொலை செய்யப்பட்ட அமரர் அருட்பணி மேரி பஸ்தியான் அடிகளாரின் உருவச் சிலைக்கு மாலை அணிவித்து சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர். இதன் போது, அடிகளார் கொல்லப்பட்ட சமயம் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கும் தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நினைவேந்தலை முன்னிட்டு இரத்த தான நிகழ்வும் முன்னெடுக்கப்பட்டது.

போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்கியதுடன், உயிரிழந்த மக்களின் உடல்களை மீட்டு அடக்கம் செய்தவருமான மேரி பஸ்தியான் அடிகளார் கடந்த 1985 ஜனவரி 6ஆம் திகதி இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அகிலத்....

அத்துடன், வடக்கு மாகாணத்தில் விளையாட்டுத்துறை மேம்பாட்டுக்காக முன்னெடுக்கப்பட்டுவரும் திட்டங்களுக்கு ஆதரவையும் ஆலோசனைகளையும் வழங்குமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார். இவருக்கு தேவையான ஏற்பாடுகளை செய்து கொடுக்குமாறும் ஆளுநருக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைபெற்ற சிரேஷ்ட பிரஜைகளுக்கான தடகள போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்றிருந்த திருமதி அகிலத்திருநாயகி (71) இரண்டு தங்கப் பதக்கங்கள் மற்றும் ஒரு வெண்கல பதக்கம் ஆகியவற்றை வென்றுள்ளார்.

முல்லைத்தீவு, முள்ளியவளையை சேர்ந்த இவர், 1,500 மற்றும் 5,000 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் முதலிடம் பெற்று தங்கப் பதக்கம் வென்றுள்ளார். 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் வெண்கல பதக்கம் வென்றுள்ளார். 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் நான்காவது இடத்தை பிடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அரசமைப்பு....

இதன்படி அதற்கான விதிமுறைகள் தயாரிக்கப்பட்டு வர்த்தமானி அச்சிடப்பட்டுள்ளது. இது எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எதிர்காலத்தில் அரசமைப்பு பேரவையால் மேற்கொள்ளப்படும் நியமனங்கள் இந்த ஒழுங்குமுறைகளுக்கு அமைவாக எவ்வாறு மேற்கொள்ளப்படும்? தொடர்புடைய அளவுகோல்கள் என்ன? போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றும் மேலும் தெரியவருகின்றது.

எதிர்காலத்தில் நிதி நிதியத்தினால் வழங்கப்படவுள்ள கடன் தவணைகளை இலங்கைக்கு வழங்குவதற்கு இந்த நிபந்தனை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

இதன்படி, சட்டமா அதிபரின் அனுமதியின் பின்னர் இந்த விதிமுறைகள் தொடர்பான வர்த்தமானி தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும்.

ஆனால், அரசலமைப்பு பேரவையில் சிவில் கூட்டணியை பிரதிநிதித்துவப்படுத்தும் 3 உறுப்பினர்கள் இந்த விதிமுறைகளை அங்கீகரிக்கவில்லை -என்றும் கூறப்படுகின்றது.

ஈழநாடு
Eelanadu

# மயிலிட்டி கலைமகள் ம. வியின் காணியை விடுவிக்க நடவடிக்கை

## உறுதியளித்தார் ஆளுநர் சார்ள்ஸ்

**யாழ்ப்பாணம், ஜன. 07**

**மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயத்துக்கான காணியை விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுப்பேன் என வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.**

இலங்கை விமானப்படையின் 73ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு யாழ்ப்பாணம் மயிலிட்டி கலைமகள் வித்தியாலயத்தில் புதிய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும், சுமார் 28 வருடங்களின் பின்னர் படையினரிடமிருந்து விடுவிக்கப்பட்ட மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயத்துக்கான புதிய கட்டடம் ஒன்றை நிர்மாணிக்க இலங்கை விமானப் படை முன்வந்துள்ளது.

சுமார் 80 இலட்சம் ரூபாய் செலவில் இலங்கை விமானப்படையினரால் பாடசாலைக்கான புதிய கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது. இது வரவேற்கத்தக்க விடயமாகும்.

இன்றைய நாட்களில் ஜனாதிபதி, வடக்கு மாகாணத்தில் பல தரப்பட்ட சந்திப்புகளையும் மாவட்டங்களின் ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களையும் நடத்தி மக்களின் தேவைகள், அபிவிருத்திகள் தொடர்பில் கலந்துரையாடி வருகிறார். அத்தகைய விடயங்களில் மக்களின் தேவைகளை விரைவாக பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரைகளையும் விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மிக விரைவில் அதற்கான செயல்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

அத்துடன், ஏனைய உட்கட்டமைப்பு பிரச்னைகள் தொடர்பில் எழுத்து மூலம் கோரிக்கைகளை பிரதேச செயலாளர் மற்றும் உரிய அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்குமாறும், அதன் பிரதியை தனக்கும் அனுப்பிவைக்குமாறும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயத்தை 1990 ஜூலை 16ஆம் திகதி படையினர் தமது ஆளுகைக்குள் கொண்டு வந்தனர். 28 வருடங்களின் பின்னர் 2018 செப்ரெம்பர் 06ஆம் திகதி இந்தப் பாடசாலை மக்களிடம் கையளிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# டெங்கு பரவலை கட்டுப்படுத்த அவசர தொலைபேசி இலக்கம்!



கொழும்பு, ஜன. 07

டெங்கு நோய் பரவலை தடுத்தல் - கட்டுப்படுத்துவது தொடர்பான பொதுமக்களின் அழைப்புகளுக்காக அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் அனர்த்த முன்னெச்சரிக்கை மற்றும் பதிலளிப்பு பிரிவால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள 011-7 966 366 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக சனி, ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்கள் உட்பட அனைத்து நாட்களிலும் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை டெங்கு மற்றும் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் பற்றிய தகவல்களை அளிக்க முடியும். (ஐ)

# யாழ். சித்தமருத்துவத்துறையை பீடமாக தரமுயர்த்த கோரிக்கை!

## ஜனாதிபதியிடம் மாணவர்கள் முன்வைத்தனர்

யாழ்ப்பாணம், ஜன. 07

யாழ்ப்பாண பல்கலைக்கழக சித்த மருத்துவ துறையை பீடமாக தரமுயர்த்த வேண்டும் என பல்கலைக்கழக மாணவர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவ பிரதிநிதிகளுக்கும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையேயான கலந்துரையாடல் இடம்பெற்ற போதே குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஸ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சிரேஸ்ட பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா ஆகியோரும் அக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

குறித்த கலந்துரையாடலில், மாணவர்களினால், மாணவ விடுதிகளில் உள்ள குறைபாடு, முகாமைத்துவ பீடத்திற்கான பேருந்து வசதிகளை ஏற்படுத்தல், சித்த மருத்துவ துறையை பீடமாக தரமுயர்த்தல், இணைந்த சுகாதார விஞ்ஞான பீட மாணவர்களுக்கான உள்ளக பயிற்சி வழங்குதல் போன்ற விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தாதியர் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தோர் கவனத்துக்கு!

கொழும்பு, ஜன. 07

தாதியர் பயிற்சிக்கான மாணவர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வு தொடர்பான விவரங்கள் சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் (https://www.health.gov.lk/) வெளியிடப்பட்டுள் ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரர்கள் இணையத்தளத்தைப் பார்த்து, நேர்காணலின் திகதி, இடம் மற்றும் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் பெற்றுக்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

2019/2020 க. பொ. த உயர்தர விஞ்ஞானம் மற்றும் கணித பிரிவில் மூன்று பாடங்களில் சித்தியடைந்த 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. எதிர்வரும் 13ஆம் திகதி முதல் பெப்ரவரி 18ஆம் திகதி வரை மாணவர் தாதியர் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுவதற்கான முதற்கட்ட தகுதித் தேர்வு நேர்காணல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (ஐ)

# ஜல்லிக்கட்டு வீர விளையாட்டு திருமலையில் நேற்று நடந்தது!

திருகோணமலை, ஜன. 07

தமிழர் திருநாளான தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் ஏற்பாடு செய்துள்ள கலாசார விழா திருகோணமலையில் நேற்று ஆரம்பமானது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் ஆரம்பமான இந்த விழா பொங்கல் பண்டிகை வரை திருகோணமலை மாவட்டத்தின் பல் வேறு பகுதிகளில் நடைபெறவுள்ளது.

நேற்று சம்பூரில் ஆரம்பமான கலாசார விழாவில் காளைகளை அடக்கும் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு நடைபெற்றது.

கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் மலேசிய பாராளுமன்ற உறுப்பினர் சரவணன் முருகன், தென்னிந்திய நடிகர் துரைராஜ் நந்தா, இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

தமிழர்களின் அடையாளமாகத் திகழும் ஜல்லிக்கட்டு விளையாட்டில் 250 காளைகள் பங்கேற்றன. 150 வீரர்கள் காளைகளை அடக்குவதற்காக பங்கேற்றிருந்தனர். (ஐ)













இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மார்பகப் புற்றுநோய் சிகிச்சையில் செயற்கை நுண்ணறிவு!



**சிதம்பரம் இரவிச்சந்திரன்**

தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தினால் மருத்துவத் துறையில் மனிதர்களின் வேலைப் பளு பாதியாகக் குறையும் என்று ஆரம்பக் கட்ட ஆய்வுகள் கூறுகின்றன. ஸ்மார்ட் ஸ்தெடாஸ்கோப் முதல் மருத்துவ மனையில் அவசரப் படுக்கை வசதி தேவைப்படுவோரின் எண்ணிக்கையைக் கணித்து முன்கூட்டியே கூறுவது வரை செயற்கை நுண்ணறிவு உதவுகிறது.

மார்பகப் புற்றுநோயைக் கண்டறிய செயற்கை நுண்ணறிவின் உதவியுடன் நடத்தப்படும் திரையிடல் (screening) பாதுகாப்பானது. இது கதிரியக்கவியலாளர்களின் (radiologists) வேலை பளுவைப் குறைக்கிறது என்று இது பற்றிய விரிவான ஆய்வுகள் கூறுகின்றன. உலகளவில் உயிரிழப்புகளை ஏற்படுத்துவதில் மார்பகப் புற்றுநோய் முக்கிய இடம் பெற்றுள்ளது என்று உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் 2.3 மில்லியன் பெண்கள் இந்த நோய்க்கு புதிதாக ஆளாகின்றனர். துல்லியமான திரையிடல் இதை முன்கூட்டியே கணித்துக் கூறி, உயிரிழப்புகளைக் குறைக்க உதவுகிறது. முன்கூட்டியே கண்டுபிடிக்கப்படுவதால் ஆரம்ப நிலையிலேயே சிகிச்சையைத் தொடங்க முடியும். இரண்டு கதிரியக்கவியலாளர்கள் இணைந்து பணிபுரிவதற்குச் சமமாக செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் திரையிடல் பரிசோதனைகள் செயல்படுகிறது என்று ஆரம்பகட்ட ஆய்வுகள் கூறுகின்றன.

**முடிவுகள் தவறாகப் போவதில்லை**

தவறான முடிவுகளை இது குறைக்கிறது. 80,000 பெண்களிடம் நடத்தப்பட்ட இது பற்றிய ஆய்வு, லேன்சட் ஆங்காலஜி (Lancet Oncology) என்ற ஆய்விதழில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி புற்றுநோயை மாமொகிராம்களில் (Mammogram) சுய பரிசோதனை மூலம் கண்டுபிடிக்க நடந்த ஆய்வின் முடிவுகள் துல்லியமாக இருந்தன.

ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த சராசரி 54 வயதுடைய பெண்களிடம் இத் தொழில்நுட்பத்தின் துணையுடன் செயல்படும் திரையிடலைப் பயன்படுத்தி புதிய ஆய்வுகள் நடத்தப்பட்டன.

இதில் பாதி ஸ்கேன்களின் பரிசோதனைகள் இரண்டு கதிரியக்கவியலாளர்களால் மேற்கொள்ளப்பட்டன. மீதி பாதி செயற்கை நுண்ணறிவின் மூலம் இயங்கும் திரையிடல் தொழில்நுட்பத்தால் நடத்தப்பட்டன. பிறகு இவற்றின் முடிவுகள் மற்ற நிபுணர்களால் பரிசோதிக்கப்பட்டது. ஆய்விற்கு உட்படுத்தப்பட்டவர்களில் 244 பேருக்கு அதாவது 28 வீதம் பெண்களுக்கு செயற்கை நுண்ணறிவு திரையிடல் மூலம் புற்றுநோய் இருப்பது தெரிய வந்தது. 203 பேருக்கு 25 வீதம் பெண்களுக்கு வழக்கமாக நடைபெறும் வழிகள் மூலம் நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

41 வீதம் திரையிடல் பரிசோதனைகள் நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நடத்தப்பட்டன. இதில் 19 பேருக்கு ஆக்ரமிப்பு வகை மற்றும் 22 பேருக்கு சிட்டு வகை நோயுள்ளது கண்டுபிடிக்கப்பட்டது. புற்றுநோய் செல்களின் வளர்ச்சி உடலின் மற்ற பகுதிகளையும் பாதிக்கும் நிலையில் இருப்பதே ஆக்ரமிப்பு புற்றுநோய். நோயை உருவாக்கும் செல்களின் வளர்ச்சி எபிதீலியல் செல்களுக்கு ஆழமாக பரவாத நிலை அல்லது நோய் மற்ற உடற்பகுதிகளுக்குப் பரவாத நிலை சிட்டு புற்றுநோய்.

**பரிசோதனை நேரம் குறையும்**

தவறான முடிவுகள் மனிதர்கள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நடத்தப்பட்ட சோதனைகளில் ஒரே அளவில் 1.5 வீதம் என்ற அளவில் கிடைத்தன. கதிரியக்கவியலாளர்கள் நுண்ணறிவுத் தொழில்நுட்பம் எடுத்த 36,886 ஸ்க்ரீனிங் முடிவுகளைப் பரிசோதித்தனர். இது கதிரியக்கவியல் நிபுணர்களுக்கு 44 வீதம் திரையிடல் சோதனை முடிவுகளைப் பரிசோதிக்கும் வேலை பளுவைக் குறைத்தது. வழக்கமான ஸ்க்ரீனிங் முடிவுகளை இரண்டு முறை பரிசோதிக்கும்போது கிடைக்கும் அதே முடிவுகளே தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியபோதும் கிடைத்தது.

இது தகுதியான கதிரியக்கவியலாளர்கள் பல நாடுகளிலும் இல்லாத பற்றாக்குறை பிரச்சனையைப் போக்க பெரிதும் உதவும். நிபுணர்கள் மற்றும் தொழில்நுட்பத்தை ஒருங்கே பயன்படுத்தி திரையிடல் சோதனை முடிவுகளை மதிப்பிடுவது பற்றி மேலும் ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும். வேலைப் பளு குறைவதால் நிபுணர்கள் மேம்பட்ட நோய்க்கண்டறிதலில் ஈடுபட முடியும். இதனால் நோயாளிகளின் காத்திருப்பு காலம் குறையும் என்று ஆய்வுக்கட்டுரையின் முன்னணி ஆசிரியர் மற்றும் ஸ்வீடன் நுரையீரல் பல்கலைக்கழக விஞ்ஞானி டாக்டர் கிரிஸ்டினா லேங் கூறுகிறார்.

புதிய தொழில்நுட்பங்கள்

இந்த கண்டுபிடிப்பு மகத்தானது என்றாலும் தொழில்நுட்பத்தின் மூலம் பெறப்படும் முடிவுகளின் துல்லியத் தன்மை பற்றி மேலும் தீவிர ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும் என்று லண்டன் குவின் மேரி பல்கலைக்கழக புற்றுநோய் திரையிடல் துறை பேராசிரியர் ஸ்டீபன் டஃப்பி (Stephen Duffy) கூறுகிறார். காலத்திற்கு ஒவ்வாத பழைய தகவல் தொழில் நுட்ப முறைகள் அகற்றப்பட வேண்டும்.

இது போன்ற புதிய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படும்போது ஆய்வாளர்கள் மற்றும் பணியாளர்களின் நேரம் மிச்சமாகும் என்று மார்பகப் புற்றுநோய் இப்போது என்ற தொண்டு நிறுவனத்தின் ஆய்வுகளுக்கான தகவல் தொடர்புத் துறை தலைவர் டாக்டர் கட்ரீனா தேம்சினேட் கூறுகிறார்.

இந்த கண்டுபிடிப்பு ஊக்கமளிப்பது நிபுணர்களின் நேரத்தை மிச்சப்படுத்துவது. திறனை மேம்படுத்தும் விரைவான முடிவுகளை எடுக்கலாம். நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை புற்றுநோய் தீர்வில் மேலும் தீவிரமாகப் பயன்படுத்த இந்த கண்டுபிடிப்பு தூண்டுதலாக அமையும். இதனால் நோயை முன்கூட்டியே கண்டறிந்து சிகிச்சையை ஆரம்பிக்கலாம். இத்தொழில்நுட்பத்தின் உதவியுடன் மேலும் பல பெண்களின் உயிரைக் காக்க முடியும் என்று கதிரியக்கவியலாளர்களுக்கான ராயல் கல்லூரி தலைவர் டாக்டர் காத்தரீன் ஹேலிடே கூறுகிறார்.

உலகளவில் மார்பகப் புற்றுநோய் பெண்களில் அதிக உயிரிழப்புகளுக்கு ஒரு முக்கிய காரணம். இதற்கான சிகிச்சையில் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் புதியதொரு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.



